தமிழ்

the phenomenon of

# LIFE RESPONSE

## in TAMIL



# Life Response Incidents
# W/ Tamil Translation




**TAMIL ENTRY INTO LIFE RESPONSE GROUP - New!**
Dear Tamil members of the Life Response Facebook group. Please enter in Tamil your Life Response experiences into posts at this Life Response Facebook group. This is especially useful for people with limited English skills. Thanks. -Roy

**புதிய... தமிழ் பதிவுகள்!**
உங்கள் வாழ்வின் மறுமொழி அனுபவங்களை தமிழில் எழுதி, இந்த 'வாழ்வின் மறுமொழி' (Life Response) முகநூல் (Facebook) குழுவில் பதிவு செய்யுங்கள். இது குறிப்பாக ஆங்கிலத்தை சரிவர புரிந்து கொள்ள இயலாதவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நன்றி.- Roy





**The Web of Life and Life Response**
The Mother here describes the essential makeup of reality and the interconnectedness among things that enables the phenomenon of Life Response to take place:

"I have a curious impression of a kind of web -- a web with ... like very loose threads, I mean not tightly meshed, connecting all events, and if you have power over one of these webs, there's a whole field of circumstances that apparently have nothing to do with each other but

which are linked together there in such a way that one necessarily implies the existence of the other ... And I have the impression it's something that envelops the earth.

And it's not mental. They are circumstances that depend on one another, in a completely invisible way outwardly, without any mental logic, and yet as though connected to one another.

If you are conscious, really conscious of that, that's how you can change circumstances."

**வாழ்வின் வலைப்பின்னலும் வாழ்வின் மறுமொழியும்**

வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் ஒன்றுக்கொன்று உள்ளூர தொடர்பு உடையவை. அதனால் நமது ஒவ்வொரு செயலையும் சிறப்பாக்குதல் அவசியம். அப்பொழுதுதான் வாழ்வின் மறுமொழியைப் பெற முடியும் என ஸ்ரீஅன்னை இங்கு விவரிக்கிறார்.

"எனக்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் ஒரு வகையான வலை போல் தோற்றமளிக்கிறது. வலை எனில்... கெட்டியான சிக்கல்களை கொண்டதல்ல.

மெல்லிய, இறுக்கமற்ற இழைகள்.... அனைத்து நிகழ்ச்சிகளையும் இணைக்கின்றன.


அதில் நீ ஒர் இழையை அறியும் ஆற்றல் பெற்றால், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாததைப் போல் தோற்றமளிக்கும் நிகழ்ச்சிகள் உண்மையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்பதும், ஒன்று மற்றதின் ஆக்கத்திற்கு வழிவகுக்கிறது என்பதும் புரியும். மேலும், இவ்வுலகம் முழுவதும் இந்த வலையால் போர்த்தப்பட்டிருப்பது போல் எனக்குத் தோன்றுகிறது.

இது அறிவு சார்ந்த விஷயம் அல்ல. அந்தச் சூழ்நிலையில் நடக்கும் நிகழ்ச்சிகள் ஒன்றையொன்று சார்ந்தவை. புறத்தில் அவற்றின் தொடர்பை முற்றிலும் காண இயலாது. அறிவு சார்ந்த எந்த நியதிக்கும் அவை உட்படாதவை. இருப்பினும் அந்த நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக இருக்கும்.

நீ விழிப்புணர்வுடன் இருந்தால், அவற்றைப் பற்றிய உண்மையான விழிப்புணர்வுடன் இருந்தால் உன்னால் சூழ்நிலைகளை மாற்ற இயலும்"

Quantum Entanglement - i.e. Non-local Connection - is science's explanation of 'Life Response' phenomenon.

"வாழ்வின் மறுமொழி'' நிகழ்வுகளைப் பற்றிய விஞ்ஞானத்தின் விளக்கம், ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பொழுதும், பின்னல் போல் அமைந்திருக்கும் அணுக்களின் அமைப்பு பற்றிய Quantum Entanglement ஆகும்.



Quantum Entanglement, - where two objects become intertwined and remain so no matter the distance that grows between them, including across the universe - is the scientific basis of "The Secret" and "Life Response" instantaneous ATTRACTION phenomenon; particularly the Alignment of the two entities aspect.

Quantum Entanglement - ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கும் இரு பொருள்களுக்கிடையேயான தூரம் எவ்வளவு வளர்ந்த போதிலும், அது பிரபஞ்சத்தைக் கடந்து இருந்தாலும், அவற்றின் தொடர்பு அப்படியேயிருக்கும் என்பது, "அந்த இரகசியம் (The Secret)" மற்றும், "வாழ்வின் மறுமொழி" ஆகிய உடனடி ஈர்ப்பு விதிகளின் விஞ்ஞான அடிப்படை; அது குறிப்பாக இரண்டு பொருள்களுக்கிடையேயான Alignment பற்றியது.




**12 Ways to Attract Good Fortune Into Your Life**

Each of the following will attract sudden good fortune into your life:

1. Take full responsibility for the conditions around you, whether you created them or not.
2. Shift away from any negative attitudes towards others, life, or work.
3. Gladly embrace the work you are given, rather than what you desire.
4. Take to higher levels of cleanliness and orderliness.
5. Practice high money attitudes like paying off debts, collecting moneys owed, circulating funds, and non-wastage.
6. Consecrate (offering tot he Spirit) any important action you are about to take. Also consecrate an opportunity, or any negative feelings inside.
7. Don't react to another's intensities or wrong actions. Be still and detach yourself from it.
8. Speak softly and with fewer words.
9. Shift a habit to something different.
10. Consider and fully commit to one or more deep personal values you believe in.
11. Deeply aspire for something important to come into your life.
12. Put your faith in the Divine Force above all other things.

**வாழ்வில் அதிர்ஷ்டத்தை ஈர்ப்பதற்கு 12 வழிமுறைகள்**

கீழ்கண்ட ஒவ்வொரு வழிமுறையும் வாழ்வில் உடனடியாக அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும்.

1. உங்களைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளுக்கு, நீங்கள் எந்த வகையிலும் காரணமாக இல்லாவிட்டாலும் கூட அதற்கு முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளுதல்.
2. மனிதர்கள், வாழ்க்கை, வேலை இவற்றின் மீது ஏதேனும் எதிர்மறை எண்ணங்களோ, உணர்வுகளோ, இருந்தால் அதில் இருந்து விலகுதல்.
3. உங்களுக்கு விருப்பப்பட்ட வேலையை விட, கொடுக்கப்பட்ட வேலையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளுதல்.

4. உயர்நிலை சுத்தத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடித்தல்.
5. பணம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் உயர்ந்த நோக்கங்களான கடனை குறித்த நேரத்தில் அடைப்பது, கொடுத்த கடனை வசூல் செய்வது, தேவையான பணத்தை செலவழிப்பது, பணத்தை வீணாக்காமல் இருப்பது போன்றவற்றை கடைப்பிடித்தல்.
6.நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் முக்கியமான வேலையை ஆன்மாவுக்கு சமர்ப்பணம் செய்தல். மேலும் ஒரு வாய்ப்பை சமர்ப்பணம் செய்தல் அல்லது உங்களுக்குள் ஏதேனும் தவறான உணர்வுகள் இருப்பின் அவற்றையும் சமர்ப்பணம் செய்தல்.
7. அடுத்தவர்களின் தீவிர அல்லது தவறான செயலுக்கு எதிர்வினை ( react ) புரியாமல் இருத்தல். அதை விடுத்து அமைதியாகவும் அவ்விஷயத்தில் இருந்து விலகியும் இருத்தல்.
8. தணிவாகவும் அளவாகவும் பேசுதல்.
9.பழக்கத்திற்கு அடிமையாகாமல், வழக்கமாகச் செய்பவற்றை வித்தியாசமாக செய்ய முயற்சி செய்தல்.
10. நீங்கள் நம்பும் பல ஆழ்நிலை பண்புகளை முழுவதுமாக உணர்ந்து கடைப்பிடித்தல்.
11. கொழுந்துவிட்டெரியும் ஆர்வத்தோடு உங்களது வாழ்வில் முக்கியமானதொன்று வர வேண்டுமென்று விரும்புதல்.
12. அனைத்திற்கும் மேலாக இறைசக்தி மேல் ஆழ்ந்த நம்பிக்கை கொள்ளுதல்.

Life Is continually throwing up such synchronicities, 98% of which we miss. As we become more conscious, we increasingly perceive them all around us.

PS Synchronicities are often precipitated by taking a focused interest in a subject matter, circumstance, event, etc. - as was the case here.

வாழ்வு, ஒரே நேரத்தில் நிகழக்கூடிய பல நிகழ்ச்சிகளின் மூலம் தொடர்ந்து நமக்கு உணர்த்திக்கொண்டே இருக்கிறது. 98% சதவிகிதம் நாம் அதை உணராமல் தவற விட்டு விடுகிறோம். விழிப்புடன் நோக்கினால் அவை நம்மைச் சுற்றி நடந்துகொண்டேயிருப்பதைக் காணலாம்.

ஒரு குறிப்பிட்ட இடத்தை, பொருளை, சூழ்நிலையை, செயதிகளை ஒரு முனைப்படுப்படுத்தப்பட்ட ஆர்வத்தோடு நோக்கினால், ஒரே

நேரத்தில் நடக்கும் பல நிகழ்ச்சிகளின் மூலம் வாழ்வு தன் ரெஸ்பான்ஸை நமக்கு உணர்த்துகிறது.




**GO THE EXTRA MILE; LIFE WILL RESPOND**
An instructor had some extra time before a class to prepare for yet another class later in the week. He thus made that extra effort, thereby making the best use of his time.
When he was done, he opened his email account and discovered to his delight that a collogue of his had completed a vast important work that the instructor did not expect to be done for a while, if ever.

The instructor's extra effort attracted an unexpected result that perfectly corresponded to his own extra work.
Life always mirrors on the outside any movement to a higher order, including making the extra physical effort.

**அதிகபட்ச உழைப்பு வாழ்வை செயல்பட வைக்கும்**

ஒரு பயிற்றுவிப்பாளருக்கு அடுத்த வகுப்புக்குத் தேவையான பாடங்களைத் தயார் செய்வதற்குப் போதுமான நாட்கள் அவகாசம் இருந்தது. அவர் அதற்காக அதிக பட்ச உழைப்பைக் கொடுத்து தன்னுடைய நேரத்தை மிக நல்லமுறையில் செலவிட்டார்.

அந்த வேலையை முடித்துவிட்டு அவர் மின்னஞ்சலைத் திறந்த பொழுது அவருக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. அவருடன் பணியாற்றும் மற்றொருவர், ஒரு பெரிய, முக்கியமான வேலையை முடித்து விட்டிருந்தது தெரிய வந்தது. அவர் அந்த

வேலை அவ்வளவு சீக்கிரம் நிறைவடையும் என எதிர்பார்க்கவில்லை.

அந்தப் பயிற்றுவிப்பாளரின் அதிகபட்ச உழைப்பு, அவருடைய வேலைக்குப் பொருந்தியே ஓர் எதிர்பாராத பலனை ஈர்த்திருந்தது.

வாழ்வு, அதிகபட்ச உழைப்பைப் போல எத்துணை உயர்ந்த முயற்சிக்கும், வெளியுலகில் தன்னைப் பிரதிபலிக்கிறது.



Any movement from one’s current status to a higher level of consciousness - weather of effort, attitude, values, knowledge, givingness, gratitude, etc. - tends to quickly evoke corresponding positive response from life.

உயர்ந்த ஜீவியத்தை அடைவதற்கு, கடின உழைப்பு, மனப்பான்மை, பண்புகள், அறிவு, சுயநலமின்மை, நன்றியுணர்வு இவற்றின் மூலம் தற்போது இருக்கும் ஜீவிய நிலையில் இருந்து சிறிது உயர்ந்தாலும் அவற்றிற்குரித்தான வாழ்வின் நேர்மறை ரெஸ்பான்ஸை உடனடியாக எழுப்புகின்றன.

Normally we waste our energy and consciousness by activating the ego and reacting against others. Each outer egoistic initiative can be best understood as a squandering of spiritual prosperity. That is why **non-initiative and Silent Will are so powerful.** When we neither assert outwardly nor react inwardly, our energies collect deep inside as a rich reservoir that attracts the outer life, including money and the cooperation of life events. When those energies are very quiet, calm, joyous and directed in silent self-giving, Life moves toward us. (Garry Jacobs)

பொதுவாக அகந்தையால் செயல்படுவதாலும், மற்றவர்களுக்கு பதிலுறுப்பதாலும் (react), நமது சக்தியையும் ஜீவியத்தையும் வீண் செய்துவிடுகிறோம். புறத்தில் நாம் அகந்தையுடன் புரியும் ஒவ்வொரு செயலும் நமது ஆன்மீக வளத்தை வீணடிக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். ஆகவேதான் தன்முனைப்புடன் செயல்படாதிருப்பதும், மௌனத்தில் ஏற்படும் மனோசக்தியும் வலிமை வாய்ந்தவை. புறத்தில் நம்மை வலியுறுத்தாமல் இருக்கும் பொழுதும், அகத்தில் அசைவற்று இருக்கும் பொழுதும், சக்தி நம் ஆழத்தில் செழுமையான நீர்த்தேக்கம் போல் சேகரமாகிறது. அது புற வாழ்வில் சுபீட்சத்தையும், இசைவான வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் ஈர்க்கிறது. அந்த சக்திகள் அமைதியாகவும், சாந்தமாகவும், சந்தோஷமாகவும், பர நல நோக்கத்தோடு பயன்படுத்தப்படும் பொழுது வாழ்வு நம்மை நோக்கி வருகிறது. (கேரி ஜேக்கப்ஸ்)

If you go out of your way to help others, others unexpectedly will go out of their way to help you.

உங்களுடைய நிலைக்கும், சக்திக்கும் மீறிய வகையில் செயல்பட்டு நீங்கள் மற்றவருக்கு உதவும் பொழுது, மற்றவர்கள்

நீங்கள் சற்றும் எதிர்பாராத வண்ணம் அவர்களது நிலைக்கும், சக்திக்கும் மீறி செயல்பட்டு உங்களுக்கு உதவுவார்கள்.

Attempts to improve your service, such as upgrading a skill, clarifying instructor documentation, or similar, tends to attract a benefit - such as a new client or a new project in that area - from out of nowhere.

உங்களது சேவையின் தரத்தை உயர்த்துவதற்காக நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள், அதாவது ஒரு வேலையை மேலும் திறம்பட செய்தல், பயிற்றுவிப்பாளரின் பாடங்களை தெளிவுபடுத்துதல் போன்றவை எங்கிருந்தேனும் புது வாடிக்கையாளர் அல்லது அத்துறையில் புதிய வேலை போன்ற பலன்களை ஈர்க்கக் கூடியவை.



**Multi-Cause, Effect Life Response**
A single Life Response can have several causes, while a single cause can evoke multiple responses.
Eg when a man evoked the biggest sale of his life, it was caused by several things - shifting from unwillingness to willingness, by making a firm decision instead of none, and by taking to a determined action.
Inversely when a very wealthy man shifted from arrogance to humility, he attracted several things - an opportunity to redeem himself, the woman of his dreams to love and marriage, and a middle class family suddenly turning to great wealth.

**பல்வேறு காரணிகளும், விளைவுகளும் கொண்ட வாழ்வின் மறுமொழி**
ஒரு வாழ்வின் மறுமொழிக்கு பல காரணங்கள் இருக்கலாம், அதேவேளையில், ஒரு காரணம் கூட பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தலாம்.

உதாரணமாக, விருப்பமற்று இருந்ததை மாற்றி விருப்பத்துடன் கடமைகளை செய்தது, வெறுமனே இராமல் உறுதியான முடிவு ஒன்று எடுத்தது, அத்தோடு உறுதியாக அதை செயல்முறை படுத்தியது போன்ற பல்வேறு காரணங்களால் ஒரு நபர் தனது வாழ்வின் உச்சபட்ச விற்பனையை எட்ட முடிந்தது.

மாறாக ஒரு செல்வந்தர் அகந்தையான மனோபாவத்திலிருந்து அடக்கத்திற்கு மாறிய காரணத்தால், தான் இழந்த ஒன்றை மீண்டும் பெறும் வாய்ப்பு, தன் கனவு தேவதையின் அன்பு மற்றும் அவளுடனான திருமண வாழ்வு, மற்றும் ஒரு மத்தியதரக் குடும்பம் திடீரென அந்தஸ்தில் உயர்ந்தது போன்ற பல்வேறு விளைவுகளை ஈர்த்தார்.



**Altering a Contentious Relationship**
Shifting the inner to the positive always attracts a corresponding outer positive result. For example, if you've had a contentious relationship with someone, but now aspire for more positive relations, outer circumstances will present themselves that will quickly give you the opportunity to do this in full.

**சர்ச்சைக்குரிய ஓர் உறவை சரி செய்தல்**
நமது அகத்தை நேர்மறையாக மாற்றும் பொழுது, அது புறத்தில் நேர்மறை விளைவுகளை தவறாமல் ஈர்க்கிறது.
உதாரணத்திற்கு, ஒருவருடன் உங்களுக்கு சர்ச்சைக்குரிய உறவு இருக்கிறது. ஆனால் அது இப்பொழுது இணக்கமான உறவாக

வேண்டும் எனத் தீவிரமாக எண்ணும் பொழுது, அதை உடனடியாக, முழுவதுமாக சரிசெய்யும் வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில், புற சந்தர்ப்பங்கள் தானே நிகழும்.




**Power of Not Accepting the Negative**
Not believing, accepting negative news is one form of Faith. It has the power to readily cancel what was thought to be true.
One learned, evolved man was told by a breathless individual that a bunch of ex-convicts had carried off an individual at an agrarian estate.
However, the man refused to believe, feel that negative vibration of fear.
Soon after he learned that the event had never taken place.

**எதிர்மறை செய்திகளை ஏற்க மறுக்கும் பொழுது கிடைக்கும் சக்தி**
எதிர்மறை செய்திகளை நம்ப மறுப்பது, ஏற்க மறுப்பது என்பது நம்பிக்கையின் ஓர் உருவம் ஆகும். அது நாம், 'உண்மையாக இருக்குமோ?' என்று நினைத்துக் கொண்டிருக்கும் செய்திகளை ரத்து செய்யும் சக்தி வாய்ந்தது.

அறிவும் பக்குவமும் நிறைந்த ஒரு மனிதரிடம், மூச்சிரைக்க ஒருவர் ஓடிவந்து, விவசாய எஸ்டேட் ஒன்றில் முன்னாள் குற்றவாளிகள் சிலர், ஒருவரைப் பலவந்தமாகத் தூக்கிச் சென்றுவிட்டதாக கூறினார்.

அந்த மனிதர் அந்த செய்தியை நம்ப மறுத்தார். பயத்தினால் ஏற்படும் எதிர்மறை உணர்வுகளையும் உணர மறுத்தார். சிறிது நேரத்தில் அம்மாதிரியான ஒரு சம்பவமே நடக்கவில்லை என்பது தெரியவந்தது.




**Consciousness Responsibility**
Shift from blaming others to taking responsibility. This is a laudable human movement that tends to evoke positive conditions, while aiding your growth as a person.
Now go a step further and take responsibility for problems caused by others; that you have NOTHING to do with. It is called "Consciousness Responsibility" by Karmayogi. It is a supramental movement as your subtle sense perceives your relationship to all things. That nothing is outside yourself. That you are the Reality. And as a result of that action -consecrated or otherwise - life responds overwhelmingly for any and all parties.

Example: I have just been hired on to lead the staff I have had no association with in the past. They have experienced failure and discontent. I will take super-responsibility by looking inward to move life in a positive direction for my staff. Eg I will intensely consecrate (open to the higher consciousness) and thereby loosen their failures that occurred before my arrival. I am thus taking Consciousness Responsibility for something I had little or nothing to do with. Now life can respond positively for all parties involved!

**ஜீவியப் பொறுப்பு**
அடுத்தவர்களை குறை கூறும் நிலையிலிருந்து, பொறுப்பை நாமே ஏற்கும் நிலைக்கு மாறுதல். மனிதனது இந்த போற்றத்தகுந்த செயலானது, வாழ்வில் நேர்மறை சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கும், சிறந்த மனிதனாக வளர்வதற்கும் உதவும்.
ஸ்ரீ கர்மயோகி அவர்கள், மற்றவர்களால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு, அதில் உனது பங்கு ஏதும் இல்லை என்றாலும் ஒரு படி மேலே சென்று அதற்கு முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதை, 'ஜீவியப் பொறுப்பு' என்று அழைக்கின்றார். சூட்சும புலன்களின் மூலம், அனைத்துடனான தொடர்பை நீங்கள் அறிவதால் அது ஒரு சத்தியஜீவிய முயற்சியாகும். எதுவும் புறத்தில்

இல்லை. எல்லாம் உள்ளே இருக்கிறது. நமது அகமே நிதர்சனம். அதனால் அகத்தில் செய்யப்பட்ட (ஜீவியப் பொறுப்பு) செயலின் விளைவால், சமர்ப்பணம் செய்திருந்தாலும், இல்லாவிடினும், அது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வாழ்வில் மறுமொழியை பிரவாகமாக எழுப்பும்.

உதாரணமாக இப்பொழுது, எனக்கு சற்றும் அறிமுகமில்லாத ஊழியர்கள், எனக்குக் கீழே வேலை செய்யும் படியான சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் தம் வாழ்க்கையில் தோல்வியை சந்தித்து அதிருப்தி கொண்டவர்களாக இருக்கிறார்கள். எனது ஊழியர்களின் வாழ்க்கை நேர்மறை திசையில் செல்வதற்காக, நான் என் 'உள்ளே 'சென்று, அவர்களுக்காக அதிகப்படியான பொறுப்புகளை எடுத்துக் கொள்வேன்.
உதாரணத்திற்கு எனது வருகைக்கு முன் அவர்கள் வாழ்வில் ஏற்பட்ட தோல்விகள் அனைத்தையும் இறைசக்திக்கு தீவிரமாக சமர்ப்பணம் செய்வேன். அதன் மூலம் எனக்கு சிறிதளவு மட்டும் தொடர்புள்ள, அல்லது தொடர்பே இல்லாத விஷயத்திற்கு நான் ஜீவியப் பொறுப்பு எடுக்கிறேன். இப்பொழுது வாழ்வால், அனைத்து தரப்பினருக்கும் தன் மறுமொழியை வழங்க முடியும்

Withholding expression of valid criticism has the power to soon evoke great personal realization on that matter by the other party.

நியாயமான விமர்சனத்தையும் வெளியிடாமல் இருக்கும் பொழுது, அடுத்தவர் அவ்விஷயத்தைத் தானே விரைவில் பெரிதும் உணரும்படியான திறனை அது அளிக்கிறது.





Had 'Adventure of Consciousness', the book by Satprem about Sri Aurobindo, not fallen on Garry and Leslie Jacobs at Moe's Books in Berkeley in 1972, sending them to India, I would never have met them, thereby not come in contact with Karmayogi and Mother's Service Society, not written Life Response and other books, not been the same person, not encountered most of you, etc. etc.

சத்பிரேம் என்னும் எழுத்தாளர் ஸ்ரீ அரவிந்தரைப் பற்றி எழுதிய , "Adventure of Consciousness" என்னும் புத்தகம், பெர்க்லியில் உள்ள மோஸ் புத்தகக்கடையில் கேரி ஜேக்கப்ஸ் மற்றும் லெஸ்லி ஜேக்கப்ஸ் மீது விழுந்து அவர்களை இந்தியாவுக்கு அனுப்பியிராவிட்டால், நான் அவர்களைச் சந்தித்திருக்கவே முடியாது, அதன் மூலம் ஸ்ரீ கர்மயோகி அவர்களையும், மதர் சர்வீஸ் சொசைட்டியையும் தொடர்பு கொண்டிருக்க முடியாது, வாழ்வின் மறுமொழி போன்ற பல புத்தகங்களை எழுதியிருக்க முடியாது, இதைப் போன்ற ஒரு மனிதனாகியிருக்க முடியாது, உங்களைப் போன்ற பலரை சந்தித்திருக்க முடியாது, இன்னும் பல....

**THE RESPONSE THAT CHANGED MY LIFE - by Roy Posner**
**(the power of seriously directing one's future)**
Life Response is the phenomenon that occurs when an individual alters his consciousness in some way, and as a result, sudden good fortune descends on that person. E.g., as a result of overcoming a negative attitude, an ongoing problem suddenly disappears, or a golden opportunity suddenly and most unexpectedly presents itself. It occurs quite often in people's lives, though we are normally unaware of its occurrence. The key however is to invoke it consciously so that we are able to elicit these miraculous-like results on demand. We can evoke life response in this way by first developing an understanding of its

subtle workings, and then by applying the right inner and outer behaviors that tend to attract these miraculous-like results. Sometimes the response that comes alters the very course of our lives, as I believe the following incident will attest to.
By December 1974, I had graduated Syracuse University and was living with my parents in New York City. After working as part of a group of four housepainters, who also happened to be close friends, I headed west to California by van. When I settled into the San Francisco Bay area, I was free, but as yet unable to sustain myself due to lack of work. The truth is I made little effort to secure that work, since I was enjoying my freedom too much!

Soon thereafter, I met a woman there with whom I got involved. I drove back to New York, and from there flew to Brussels, Belgium where I met up with her. Together we then went on a wild bus excursion across the continent, from Amsterdam to Athens. After enjoying Athens and having a mystical experience at the Acropolis, my friend informed me that she planned to continue on to the Middle East in order to visit Egypt and Israel. However, realizing that I had strayed too far off the path, I informed her that I could go no further. And so in a dramatic scene worthy of a romantic film, we said our tearful goodbyes and separated at the Athens airport. From there I flew on to Geneva, Switzerland and then across the Atlantic to New York.

A year earlier, I had intended to go to the Graduate School of Journalism in Berkeley when I first ventured to California months earlier, but on arrival there, I decided not to attend. Nor, did I take to working in order support myself, as mentioned before. Therefore, I floundered on my visit stay in California. This time, however, as I mulled over my future from my parents home in New York, I was determined that if I returned to California, I would make a serious go of it -- i.e. I would seriously seek out and secure work to sustain myself.

As it turned out, a friend of my family had moved to California years before, and now was a very wealthy businessman in Southern California. From New York, I called this gentleman by phone, and he offered me a job at one of his giant Lumber City retail outlets in the San Fernando Valley in Los Angeles. And so once again, I headed across country, this time by Greyhound bus, and arrived once more in California. (I accumulated a lot of road mileage during these years!)

Before I headed south to Los Angeles, I met up with old friends in San Francisco, and stayed at their home for several months. During that time, I painted the large house we all lived in, and then I used the

money I earned to purchase a used car. With a means of transportation, I then drove down to Los Angeles with a friend to work at one of the Lumber City outlets run by the (previously alluded to) wealthy friend of my parents. After several months, I settled in and worked every day -- driving from my Santa Monica beach home to the inland valley suburb where my outdoor retail job was located.
One day I decided to drive to an area not far from downtown LA, and visit the "East West Center", a sort of mini ashram dedicated to a blending of eastern and western spirituality and culture. That day I met a woman there who told me of people living in the nearby San Fernando Valley who were importing gift items from the Sri Aurobindo Ashram in Pondicherry India. I had a keen interest in the sage and seer's teachings for several years and was looking to find an outlet to pursue them in the LA area. I hoped that the East-West Center would serve that purpose, which was the reason I visited that place that day. However, I was also looking to blend my spiritual interests with real work experience. I.e. I wanted my work to be an application of -- an extension of -- the spiritual knowledge I had begun to embrace. Thus, when I learned of the potential opportunity of working with the devotees who lived in the Valley, I was eager to meet them.

Shortly thereafter, I set up an appointment and visited their home. It did not take but a few moments to see that there was a powerful connection between us. Realizing our great mutual interest, we quickly arranged that I would begin selling their products by going door to door at appropriate retail outlets in the LA region. It was not only fun and invigorating being outdoors in the warm, golden sunshine during the winter months, but financially and spiritually rewarding as well. Most importantly, I had now established an entirely new direction in my life.

As it turned out, I would continue selling and working with these same individuals in a variety of capacities for the next 30 years. In fact, Growth Online itself began as a collaborative effort that was a direct outgrowth of that relationship.
And so it was on that day so long ago in Los Angeles that I made the connection with the people at the Mother's Service Society that changed the course of my life. That relationship not only aided me in my spiritual pursuits, but also provided me with a practical outlet by which I could apply these inner principles. In that way, I had finally melded together two cornerstones of my life -- spirit and work -- creating a new unity of purpose.

However, none of this would have happened if I hadn't made one critical decision. It was when I decided to seriously work. When in New

York and later in San Francisco I committed to working at my parents friend's Lumber City outlet in Los Angeles, I set in motion events that changed the course of my life. It created the vast opening that allowed me to come in contact with the Aurobindo followers in the San Fernando Valley. That inner and outer commitment to hard work attracted the fulfillment of my heart's desire. Or to put it another way, overcoming my poor attitude toward work brought me my very life's purpose.

In fact, everything that has happened to me over the next 30 years -- the sales company I built in the San Francisco Bay Area, the computer training and consulting company I founded there (GuruSoftware), the birth and development of Growth Online, the books I have written on Life Response and other subjects -- all emerged from that fateful time in December 1975 when I gave direction to my existence by deciding to seriously work, which attracted the individuals who would shape my life.

## என் வாழ்வை மாற்றிய வாழ்வின் மறுமொழி - ராய் பாஸ்னர் எதிர்காலத்தை வழிநடத்தும் ஆற்றல்

ஒருவர் தன்னுடய ஜீவியத்தை ஏதாவது ஒரு வகையில் மாற்றும் பொழுது, அதன் விளைவாக திடீரென அதிர்ஷ்டம் அவரை வந்தடைகிறது. இதையே நாம் வாழ்வின் மறுமொழி என்று அழைக்கிறோம். உதாரணமாக, ஓர் எதிர்மறையான மனநிலையை வெற்றி கொள்ளும் பொழுது நீடித்துக் கொண்டிருக்கும் ஒரு பிரச்சினை திடீரென மறைந்து போகலாம். அல்லது ஓர் அற்புதமான வாய்ப்பு அவரே எதிர்பாராதிருக்கும் நேரத்தில், திடீரென அவரை வந்தடையலாம். இத்தகைய நிகழ்வுகள் அடிக்கடி நம் வாழ்வில் நடந்தாலும், நாம் பொதுவாக அவற்றை கவனிப்பதில்லை. நாம் விழிப்பாக இருந்து ஏற்படுத்தும் மனமாற்றத்தால், நம்மால் இத்தகைய வியக்கத்தக்க விளைவுகளை நாம் விரும்பும் நேரத்தில் ஈர்க்க முடியும் என்பதே இதன் இரகசியம். வாழ்வின் மறுமொழி எவ்வாறு செயல்படுகிறது என்ற சூட்சுமத்தை அறிதலாலும், மேலும் வியக்கத்தக்க விளைவுகளை ஈர்ப்பதற்குத் தேவையான அகம் புற மாற்றங்களை செயல்படுத்துவதாலும் நம்மால் வாழ்வின் மறுமொழியை எழுப்ப முடியும். சில நேரங்களில் அத்தகைய விளைவுகள், நம் வாழ்வின் திசையையே மாற்றி விடும். கீழ்க்கண்ட நிகழ்ச்சி அதற்குச் சான்றென நான் நம்புகிறேன்.

1974-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், நான் Syracuse பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்த பின்னர் எனது பெற்றோர்களுடன் நியூயார்க் நகரில் வசித்து வந்தேன். அந்நேரத்தில் எனது நெருங்கிய நண்பர்கள் நால்வருடன் சேர்ந்து வீட்டுக்கு வர்ணம் பூசும் பணியில் ஈடுபட்டு இருந்தேன். பிறகு அவர்களுடன் (van) வேனில் மேற்குப் பகுதியான கலிபோர்னியா சென்றேன். சான் பிரான்சிஸ்கோ விரிகுடா பகுதியில் குடியேறிய பின், நான் சுதந்திரமாக இருந்தேன். ஆனால் அச்சமயம் எனக்கு வேலை சரியாக கிடைக்காததால் என்னால் ஜீவனம் செய்ய இயலவில்லை. உண்மை என்னவென்றால், நான் அளவு கடந்து என் சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருந்ததால், அந்த வேலையை தக்க வைத்துக் கொள்ள தேவையான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

அதன் பின்னர் விரைவிலேயே அங்குள்ள ஒரு பெண்ணுடன் பழக ஆரம்பித்தேன். மீண்டும் நியூயார்க் சென்று, அங்கிருந்து பெல்ஜியம் நாட்டிலுள்ள Brussels நகருக்கு விமானத்தில் பயணித்து அப்பெண்ணை சந்தித்தேன். அதன் பின்னர் இருவரும் ஒரு சுற்றுலா பேருந்தில் துணிகரமாக ஐரோப்பிய கண்டத்தின் குறுக்காக, Amsterdam-லிருந்து, ஏதன்ஸ் நகருக்குப் பிரயாணித்தோம். ஏதன்ஸ் நகரைச் சுற்றிப் பார்த்து, அங்குள்ள அக்ரோபோலிஸில் விசித்திரமான ஓர் அனுபவம் ஏற்பட்டது. பின்னர் என் தோழி எகிப்து மற்றும் இஸ்ரேல் செல்வதற்காகத் தொடர்ந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு பிரயாணிக்கவிருப்பதாகக் கூறினாள். எனினும், என்னுடைய பாதையிலிருந்து வெகுதூரம் விலகி வந்துவிட்டதை உணர்ந்த நான், இனிமேலும் என் பயணத்தைத் தொடரமுடியாதெனத் தெரிவித்தேன். அதனால் ஒரு காதல் திரைப்படத்தில் வரும் உணர்வு பூர்வமான காட்சியைப் போல், ஏதன்ஸ் விமான நிலையத்தில் இருவரும் கண்ணீருடன் பிரியா விடை பெற்றோம். அங்கிருந்து நான் சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள ஜெனிவாவுக்கு சென்று, அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து நியூயார்க்கை அடைந்தேன். ஒரு வருடத்திற்கு முன்பு, நான் முதன் முதலாக கலிபோர்னியா சென்ற பொழுது, பெர்க்லியில் உள்ள பத்திரிக்கைத்துறை பட்டப்படிப்பில் சேர வேண்டுமென்று விரும்பினேன், ஆனால் இப்பொழுது அங்கு சென்ற பொழுது முடிவை மாற்றிக் கொண்டேன். முன்பே குறிப்பிட்டது போல் வருமானத்திற்கு என வேலை ஏதும் தேடிக் கொள்ளாததால் கலிபோர்னியாவில் தங்குவது குறித்து ஒரு முடிவுக்கு வர முடியாமல் இருந்தேன். இருப்பினும் இம்முறை பெற்றோர் வீட்டிலிருந்து பொழுதைக் கழிக்க விரும்பாமல், நான்

கலிபோர்னியாவுக்குத் திரும்பினால் தீவிரமாக முயற்சி செய்து எனக்கென்று ஒரு வேலையைத் தேடிக் கொள்ள வேண்டும் என முடிவு செய்தேன்.

எங்கள் குடும்ப நண்பரொருவர் பல வருடங்களுக்கு முன்பு கலிபோர்னியா குடி பெயர்ந்ததும், இப்பொழுது அவர் தெற்கு கலிபோர்னியாவில் செல்வச்செழிப்புள்ள வணிகராக இருக்கிறார் என்பதும் தெரிய வந்தது. அவரை நான் தொலைபேசியில் தொடர்பு கொண்ட பொழுது, அவர் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில், சான் பெர்னான்டோ பள்ளத்தாக்கிலுள்ள தன்னுடைய மிகப்பெரிய Lumber City வியாபாரக் கடையில் வேலை போட்டுக் கொடுத்தார். மீண்டும் ஒருமுறை மேற்கு நோக்கி, இம்முறை Greyhound பேருந்தில் பிரயாணித்து மீண்டும் கலிபோர்னியா வந்து சேர்ந்தேன். (சமீப காலங்களில் நான் அதிகமாகப் பிரயாணித்திருந்ததால் அதிகமான "mileage" சேகரித்திருந்தேன்!)

மீண்டும் தெற்கே லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்குப் பிரயாணம் செய்வதற்கு முன் சான் பிரான்சிஸ்கோவில் பழைய நண்பர்களைச் சந்தித்த நான், அவர்கள் வீட்டிலேயே பல மாதங்கள் தங்கியிருந்தேன். அந்நேரத்தில் நாங்கள் தங்கியிருந்த பெரிய வீட்டை வர்ணம் பூசும் வேலையைச் செய்து, அதில் சம்பாதித்த தொகையைக் கொண்டு ஒரு பழைய காரை வாங்கினேன். நானே பயணிக்கக்கூடிய வசதி வந்ததால், காரை எடுத்துக்கொண்டு, நண்பர் ஒருவருடன் பிரயாணித்து, என் பெற்றோரின் நண்பரால் நடத்தப்படும், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள Lumber City வியாபாரக் கடைக்கு (முன்னரே கூறியிருந்தது) வந்தேன். பல மாதங்கள் கழித்து, அங்கேயே நான் தங்கி தினமும் வேலை பார்க்க ஆரம்பித்தேன். என்னுடைய Santa Monica கடற்கரை வீட்டிலிருந்து, புறநகர் பள்ளத்தாக்கிலிருக்கும் அந்த வியாபாரக் கடைக்கு வருவது எனது தினசரி வாடிக்கையானது.

ஒருநாள், நகரின் மையப்பகுதியிலிருந்து சிறிதே தொலைவில் இருந்த "கிழக்கு மேற்கு மையம்" (East West Center) செல்வதற்கு நான் முடிவெடுத்தேன். அது கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய ஆன்மிகம், கலாச்சாரம் ஆகியவற்றை இணைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் ஆசிரமம் போன்ற அமைப்பு அது. அங்கு ஒரு பெண்மணியை சந்தித்த பொழுது, அவர் அருகிலிருக்கும் சான் பெர்னான்டோ பள்ளத்தாக்கில் வசித்து வரும் சிலர் இந்தியாவில், பாண்டிச்சேரியிலுள்ள ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்திலிருந்து பரிசுப் பொருள்களை இறக்குமதி செய்வதாகக் கூறினார். பல

வருடங்களாக ரிஷியும், தீர்க்கதரிசியும் ஆன ஸ்ரீ அரவிந்தரின் போதனைகள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த நான் அதை வளர்த்துக் கொள்வதற்கு லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஓர் இடம் இருக்குமா என்று தேடிக்கொண்டிருந்தேன். அதை கிழக்கு மேற்கு மையம் பூர்த்தி செய்யும் என்ற நம்பிக்கையில் தான் அன்று அந்த இடத்திற்கு வந்திருந்தேன். எனினும் எனது ஆன்மீக ஆர்வங்களை, நிஜ வாழ்க்கையில் இணைத்து அனுபவங்களை வெளிப்படுத்தும் பணியை நான் தேடிக் கொண்டு இருந்தேன். அதாவது நான் உணர ஆரம்பித்திருக்கும் ஆன்மிக அறிவை பயன்படுத்தக்கூடிய அல்லது மேலும் வளர்க்கக்கூடிய வேலையை நான் தேடிக்கொண்டிருந்தேன். ஆகையினால், அந்தப் பள்ளத்தாக்கில் வசித்து வரும் அன்பர்களோடு இணைந்து பணியாற்றும் வாய்ப்பு அதிகம் இருப்பதை அறிந்த நான், அவர்களைச் சந்திக்க மிகுந்த ஆர்வம் கொண்டேன்.

அதன் பின்னர் வெகு விரைவிலேயே அவர்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்து, அவர்களின் வீட்டுக்குச் சென்றேன். சந்தித்த சில நொடிகளிலேயே எங்களுக்குள் ஒரு சக்தி வாய்ந்த தொடர்பு இருப்பதை உணர முடிந்தது. எங்களது ஆர்வம் ஒன்றாக இருப்பதை உணர்ந்த நாங்கள், நான் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள ஒவ்வொரு தகுந்த விற்பனைக்கடைக்கும் சென்று அப்பரிசுப் பொருள்களை விற்பது என்று விரைவாக ஏற்பாடு செய்தோம். அது மகிழ்ச்சி தரக்கூடியதாகவும், குளிர் மாதங்களில் இளம் சூடான, பொன்னிற சூரிய ஒளியில் வெளியில் செல்வது எழுச்சியூட்டுவதாகவும் இருந்தது. மற்றும் நிதியளவிலும், ஆன்மிக ரீதியிலும் திருப்தியளிக்கக் கூடியதாகவும் இருந்தது. மிக முக்கியமாக, என் வாழ்வில் புதிய திசையில் நான் பயணிக்க ஆரம்பித்தேன்.

நான் பரிசுப் பொருள்களை விற்பதும், அதே நபர்களோடு பல்வேறு துறையில் இணைந்து பணியாற்றுவதும் அடுத்த 30 ஆண்டுகளுக்குத் தொடர்ந்தது. அந்த உறவின் நேரடி விளைவு என்ன என்பதை சொல்ல வேண்டுமானால், Growth Online வலைத்தளம் அதுவாகவே கூட்டு முயற்சியால் உருவாக ஆரம்பித்தது எனலாம்.

ஆகவே, வெகு நாட்களுக்கு முன்னர், அந்த நாளில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் The Mother's Service Society-ஐச் சார்ந்தவர்களோடு நான் கொண்ட தொடர்பு என்னுடைய வாழ்க்கைப் பாதையையே மாற்றியது. அத்தொடர்பு என்னுடைய ஆன்மிக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது மட்டுமல்ல, என் நடைமுறை வாழ்வில் அந்த அக நெறிமுறைகளை செயல்படுத்துவதற்கும் வழி

காட்டியது. இவ்வாறாக எனது வாழ்வின் இரு துருவங்களில் இருந்த எனது ஆன்மாவையும், வேலையையும் என்னால் இறுதியாக இணைக்க முடிந்தது. குறிக்கோளுடன் கூடிய புதிய ஐக்கியம் ஜனித்தது.

எனினும், தீவிரமாக உழைக்க வேண்டும் என்ற அந்த முக்கியமான முடிவை நான் எடுத்திருக்கா விட்டால் இவை எதுவுமே நடந்திருக்காது. நான் நியூயார்க் நகரில் இருக்கும் பொழுதும் பின்னர் சான்பிரான்சிஸ்கோ நகரில் இருக்கும் பொழுதும், என் பெற்றோர்களின் நண்பர் நடத்தும் லாஸ் ஏஞ்சலஸ் நகரில் இருக்கும் Lumber City கடையில் வேலை பார்க்க வேண்டும் எனத் தீவிரமாக முடிவு எடுத்தது, என் வாழ்க்கைப் பாதையை மாற்றக் கூடிய நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக நடப்பதற்கு வித்திட்டது. அது சான் பெர்னான்டோ பள்ளத்தாக்கில் வசித்து வரும் ஸ்ரீ அரவிந்தரின் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களோடு நான் தொடர்பு கொள்வதற்குப் பெரும் வாய்ப்பாக அமைந்தது. அகத்திலும், புறத்திலும் நான் வேலை செய்ய வேண்டும் என்ற தீர்க்கமான முடிவை எடுத்தது, என் இதயத்தின் ஆசையைப் பூர்த்தி செய்தது. இன்னொரு வகையில் சொல்ல வேண்டுமென்றால், வேலை செய்வதில் விருப்பமின்றி இருந்த என் மனதை மாற்றியது, என் வாழ்வின் குறிக்கோளை அறிய வைத்தது.

உண்மையில் அடுத்த 30 ஆண்டுகளில் என் வாழ்வில் நடந்த -- சான் பிரான்சிஸ்கோ விரிகுடா பகுதியில் விற்பனை நிறுவனத்தைத் தோற்றுவித்தது, கணினி பயிற்றுவித்தல் மற்றும் ஆலோசனை தரும் நிறுவனத்தை ஆரம்பித்தது (GuruSoftware), Growth Online வலைத்தளத்தின் உதயமும், வளர்ச்சியும், வாழ்வின் மறுமொழி பற்றிய புத்தகங்கள் மற்றும் பல புத்தகங்களை எழுதியது -- போன்ற அனைத்துமே விதியை மாற்றி எழுதிய அந்த 1975ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடந்தது. அப்பொழுது தீவிரமாக வேலை பார்க்க வேண்டும் என நான் எடுத்த முடிவு, என் வாழ்வின் அர்த்தத்திற்கு வழி காட்டியதோடு, என் வாழ்வைச் செதுக்கும் நபர்களையும் ஈர்த்தது.


**THE GIFT**
Recently I conducted a two-day training session in Irvine, California. In previous sessions I had been a bit reluctant to hand out the official books for the course; using my own materials instead. However, this time I decided to incorporate these manuals into the overall curricula.

And so at a strategic moment I handed out the books to the attendees. I began by talking about a certain topic in the book. And so I asked the students to open their books for the very first time and turn to the specific page for that topic. When I then quickly looked down, I noticed that the student closest to me already had the page open. I said to her that how was it possible to get to the page so fast? After all the book is over 200 pages and it would certainly take a few moments to thumb through it to the requested page. She then said she simply opened the book at random, and instantly found herself at that very page! When I mentioned it being a startling synchronicity, the student shrugged, merely starring back at me, without reaction or emotion.

The next day we had to work with yet another book. So once again I handed out the manual, and then again asked the students to open the book for the first time and then turn to a specific page for the topic I was discussing. Startlingly, two seconds later another student whom I passed by had instantly opened to exactly the page I requested. When I asked her what she did; she too said that she had just randomly opened the never-before-opened book, and had gone to the exact page I requested!

It just seemed utterly impossible for this to have happened; and yet once again the same miraculous-like event had taken place. Though my students seemed somewhat blasé about it all, I was shaken to the core. For my students it was mere coincidence. For myself it was an indicator of something powerful and profound that had been taking place.
And so after the class, I headed home for the evening, When I arrived, I laid down on my bed to rest, but shortly thereafter heard the letter-carrier talking with my friend at the front room. They seemed to be

discussing the arrival of some type of package. Two minutes later my friend came into the bedroom and handed me the object. And yet as she approached me, I instantly knew what it was, and took the package from her outstretched hands. In fact I had just received the first ever printed volume of Garry Jacobs' epic mystical novel 'The Book' that was promised to me. It was a Gift from the author that I dearly looked forward to receiving.

Then I suddenly realized why those miraculous circumstance had occurred on that and the previous day with my students. They were in essence "predecessors" events; i.e.. miraculous-like indicators of things to come; in this case a book to come so filled with consciousness that it has the power to instantly change people's lives. In essence, my two instances of startling book-related coincidence were a foreshadow of the arrival of The Book, which seemed like nothing less than a Gift from heaven.

**பரிசு**

நான் சமீபத்தில் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள இர்வினில் இரண்டு நாள் பயிற்சி முகாம் நடத்தினேன். இதற்கு முந்தைய பயிற்சி வகுப்புகளுக்கு, அதற்கேயுரித்தான பாட நூல்களை வழங்குவதற்குப் பதிலாக என்னுடைய பாட நூல்களை வழங்குவதற்கே விரும்பினேன். இருப்பினும், இம்முறை அனைத்து பாடங்களையும் முழுநிலையான பாடத்திட்டத்தில் இணைக்க முடிவு செய்தேன்.

ஒரு முக்கியமான தருணத்தில் பயிற்சி வகுப்பில் பங்கேற்றவர்களுக்கு பாட நூல்களை வழங்கினேன். ஒரு குறிப்பிட்ட பாடத்தை எடுத்து அதை விளக்க ஆரம்பித்தேன். மாணவர்களை அவர்களின் புத்தகத்தை முதன்முதலாகத் திறந்து அக்குறிப்பிட்ட பாடத்தை எடுக்குமாறு கேட்டுக்கொண்டேன். நான் கூர்ந்து கவனித்த பொழுது, என் அருகிலிருந்த மாணவி ஏற்கெனவே அப்பாடத்தை சரியாகத் திறந்து வைத்திருந்தாள். நான் எப்படி அப்பாடத்தை அவ்வளவு சீக்கிரம் சரியாகத் திறக்க முடியும் என வினவினேன். ஏனெனில் 200 பக்கங்களுக்கு மேலிருந்த அப்புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டி, அச்சரியான பக்கத்தை எடுப்பதற்கு சில நிமிடங்கள் பிடிக்கும். அவள் ஏதேச்சையாக புத்தகத்தைத் திறந்த பொழுது அதே பக்கம் வந்ததாக அவள் தெரிவித்தாள். அது ஒரு வியக்கத்தக்க ஒருங்கிணைவு நிகழ்வெனத் தெரிவித்த பொழுது, அவள்

தோள்களைக் குலுக்கியவாறு, எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

மறு நாள் எங்களுக்கு அடுத்த ஒரு புத்தகத்தில் பாடமிருந்தது. இம்முறையும் புத்தகத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டு, அதைத்திறந்து, நான் நடத்திக்கொண்டிருந்த அந்த குறிப்பிட்ட பாடத்தை எடுக்குமாறு கேட்டுக்கொண்டேன். இம்முறையும் வியக்கத்தக்க வகையில், இரண்டு வினாடிகளுக்குப் பின், ஒரு மாணவியைக் கடந்து செல்லும் பொழுது நான் கேட்ட அதே பாடத்தை அவள் எடுத்து வைத்திருந்தாள். அவளிடமும் என்ன செய்தாள் என வினவிய பொழுது, அவளும் இதற்கு முன்னர் திறந்திராத அப்புத்தகத்தை எதேச்சையாகத் திறந்த பொழுது அதே பாடம் வந்ததாகத் தெரிவித்தாள்.

அம்மாதிரி நடப்பதற்கு ஒரு சாத்தியமே இல்லாத மாதிரியிருந்தது. மீண்டும் ஒரு முறை வியக்கத்தக்க முறையில் அவ்விஷயம் திரும்ப நடந்தது. என் மாணவர்களுக்கு சலித்துப்போன விஷயம் போலத் தோன்றினாலும், அவ்விஷயத்தின் ஆழம் என்னை வெகுவாகப் பாதித்தது. என் மாணவர்களுக்கு ஏதோ தற்செயலாய் நடந்த நிகழ்ச்சி அது. ஆனால் எனக்கு ஏதோ ஓர் ஆழமான, சக்தி வாய்ந்த விஷயம் நடந்திருப்பதாகத் தோன்றியது.

அன்று மாலை வகுப்பு முடிந்த பின்னர் வீட்டிற்குக் கிளம்பினேன். வீட்டை அடைந்த பின்னர், படுக்கையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பொழுது, என் நண்பர் கடிதம் கொடுக்க வந்திருப்பவரிடம் பேசிக்கொண்டிருந்த சப்தம் கேட்டது. அவர்கள் ஏதோ ஒரு பார்சல் வந்திருப்பதைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். இரண்டு நிமிடங்கள் கழித்து, என் நண்பர் படுக்கையறைக்கு அப்பொருளைக் கொண்டு வந்து கொடுத்தார். அவர் என்னை நெருங்கும் பொழுதே அது என்ன என்று தெரிந்து விட்டது, என் கைகளை நீட்டி அப்பொருளை வாங்கிக்கொண்டேன். உண்மையில் எனக்கு அனுப்பப்படுவதாகச் சொல்லியிருந்த, முதன்முதலாக பிரிண்ட் செய்யப்பட்ட, கேரி ஜேக்கப்ஸ் அவர்கள் எழுதிய வித்தியாசியமான காவியமான "அந்த புத்தகம்" (The Book) என்னும் புத்தகத்தை அந்நேரத்தில் நான் பெற்றுக்கொண்டேன். நான் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த அந்த புத்தகம், எழுத்தாளரின் பரிசாக எனக்கு வந்தது.

அப்பொழுது எனக்குத் திடீரென எனது மாணவர்களுடன் நடந்த அந்த அதிசயக்கத்தக்க நிகழ்வுகள் ஏன் என விளங்கியது. அவைகள் உண்மையிலேயே "முந்தைய" நிகழ்வுகள், அதாவது அதிசயக்கத்தக்க விதமாய் பின் வரும் நிகழ்வுகளைக் குறிப்பவை. இந்த விசயத்தில் மனிதர்களின் வாழ்வை மாற்றியமைக்கக் கூடிய, ஜீவியத்தன்மை மிகுந்து வரும் அந்த புத்தகத்தைக் குறிப்பவை அவை. நான் எதிர் கொண்ட, வியக்கத்தக்க புத்தகங்களைப் பற்றிய தற்செயல் போன்ற நிகழ்ச்சிகளின் சாராம்சம், "அந்த புத்தகம்" வருவதை முன் அறிவிப்பதாகும், அது உண்மையில் சொர்க்கத்திலிருந்து வருகின்ற பரிசைப் போன்றது என்பதில் மிகையில்லை.



**VIBRATION "PASSING OVERHEAD" AS BASIS OF SYNCHRONICITY**

Imagine an invisible force or vibration is passing overhead. At about the same time you suddenly have an intuitive insight. You are thrilled because you believe you have just had an original idea.

Now you turn on the tv and there is suddenly someone talking about the same subject matter, when never in your life have you never heard or seen anyone on tv address that matter! From their side, they too perceive that they have had a unique insight; that was theirs alone.

Could it be that we are each tapping into the same force or vibration "passing overhead." And what you see as synchronicity is really a

shared experience of some force or vibration tuned into; that you had in common.

Perhaps scientists will discover the underlying physics of this phenomenon; or better yet its true nature will be uncovered by future "spiritual adventurers."

## சூட்சும உலகின் அதிர்வுகளை ஒரே நேரத்தில் நிகழும் நிகழ்ச்சிகளின் அடிப்படையில் உணர்தல்

உங்கள் கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தி அல்லது அதிர்வு தலைக்கு மேலே செல்வதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்த நேரத்தில் உங்களுக்கு திடீரென ஓர் உள்ளுணர்வு தோன்றுகிறது. அது உங்களுக்குத் தோன்றிய "சுய கருத்து" என எண்ணி சிலிர்த்துப் போகிறீர்கள்.

தொலைக் காட்சியைப் பார்த்தால் அதிலும் திடீரென ஒருவர் அதே விஷயத்தைப் பற்றி பேசிக்கொண்டு இருக்கிறார். அவ்விஷயத்தைப் பற்றி யாரோ ஒருவர் தொலைக்காட்சியில் பேசுவதை உங்கள் வாழ்நாளில் நீங்கள் பார்த்ததும் இல்லை கேட்டதும் இல்லை. அந்த நபரும், அவ்விஷயம், தனது தனித்தன்மையான உள்ளுணர்வால், தான் மட்டும் கொண்டிருக்கும் சுய கருத்து என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்.

சூட்சும உலகின் சக்தி அல்லது அதிர்விலிருந்து நாங்கள் இருவரும் இந்த அனுபவத்தை ஒன்றாக பெற்றிருக்கலாமோ..? எனவே ஒரே சமயத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் உண்மையிலேயே நீங்கள் எந்த சக்தி அல்லது அதிர்வினில் இணைந்துள்ளீர்களோ., அதிலிருந்து பெறப்பட்ட அனுபவங்கள் தான்.

இந்நிகழ்வின் அடிப்படை இயற்பியலை விஞ்ஞானிகள் ஒருவேளை கண்டுபிடிக்கலாம். ஆன்மீகத் தேடல் கொண்டவர்கள் இந்நிகழ்ச்சிகளின் அடிப்படை உண்மைகளையும் கண்டறியலாம்.







**Shift Out of Irritation Attracts Remarkable Result**
I was shopping for some bread at a huge supermarket. I was looking among the choices. Standing in front of the endless bread choices was a young girl with her mother. The youngster repeatedly called out that she liked the Artesano style bread. I never heard of it. It seemed to be an obscure brand.

However, the young girl kept calling it out to her mother over and over; imploring her to buy it, which she did. Still the young girl kept repeating her mantra about the bread!
That caused me to say in my mind sarcastically "why not say it again little girl, for a 6th time." Of course I withheld my sarcasm.
But then I had an inspiration and said to myself "why not purchase this bread and see what it's like," which I did!

I then walked down past several very long shopping isles of food. Suddenly I came upon a small presentation, and the first thing I saw was an advertisement for ... Artesano products! Though hundreds or even thousands of articles or brands could've been advertised there, it was this obscure brand that I had just earlier witnessed appeared before me!

Instantly I understood the synchronicity, having experienced such Life Response events thousands of times. Once again I clearly witnessed the fact that when you come out of negativity, - in this case out of irritation and sarcasm, - you immediately attract startling, fortuitous events.

Life had clearly winked at me on this unexpected, joyous occasion. And by purchasing the bread itself, I evoked a response that was particularly magical!

## எரிச்சலிலிருந்து விலகுதல் வியக்கத்தக்க விளைவுகளை ஈர்க்கும்

நான் ஒரு பெரிய பல்பொருள் அங்காடியில் ரொட்டிகளை ( Breads ) வாங்குவதற்காக வந்திருந்தேன். அங்குள்ள பல வகையான ரொட்டிகள் இருக்கும் அடுக்குகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். பலவிதமான ரொட்டி வகைகளுக்கு முன்னே ஒரு பெண் குழந்தை தனது தாயாருடன் நின்று கொண்டிருந்தாள். அக்குழந்தை தனக்கு Artesano ரொட்டி வகை பிடிக்குமென்று திரும்பத்திரும்ப சொல்லிக் கொண்டே இருந்தாள். நான் அப்படி ஒரு பெயரைக் கேள்விப்பட்டதே இல்லை. அது ஒரு பிரபலமில்லாத ரொட்டி வகையைப் போலத் தோன்றியது.
எனினும் அச்சிறு பெண் அதைப்பற்றி சொல்லிக்கொண்டே இருந்தாள், மேலும் தனது தாயாரை அதை வாங்கும்படி வற்புறுத்தியதால் அவரும் அதை வாங்கி விட்டார். இருப்பினும் அச்சிறு பெண் ரொட்டியைப் பற்றிய வார்த்தைகளை ஒரு மந்திரம் போல் சொல்லிக்கொண்டேயிருந்தாள்.

அதைக்கேட்ட நான், குதர்க்கமாக "இன்னும் ஒரு முறை திரும்பச் சொல்லேன் பெண்ணே..! ஆறாவது முறையாகி விடும்..! " என்று மனதிற்குள் கூறிக்கொண்டேன். அதை வெளிக்காட்டவில்லை.

அதைத்தொடர்ந்து, "ஏன் நானும் அதே வகை ரொட்டியை வாங்கினால் என்ன?" என ஓர் உள்ளுணர்வு தோன்றியதால், அவ்வாறே வாங்கி விட்டேன்.

அதன் பின்னர் பல்வேறு உணவுப் பண்டங்கள் இருக்கும் அடுக்குகளைக் கடந்து சென்றேன். திடீரென்று அங்கு ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த ஒரு விளம்பரத்தைக் காண நேர்ந்தது, அதில் முதலில் கண்ட வாசகம், "Artesano பொருள்களைப் பற்றி..." அங்கு இருந்த பல நூற்றுக்கணக்கான, இல்லை ஆயிரக்கணக்கான பொருள்களைப் பற்றி விளம்பரங்கள் வந்திருக்கலாம். ஆனால், அப்பொழுதுதான் நான் கண்டிருந்த பிரபலமில்லாத ரொட்டி வகை என் கண் முன்னே தோன்றியது.
அதைப் போன்ற ஆயிரக்கணக்கான ஒரே நேர நிகழ்வுகளை அறிந்திருந்த எனக்கு உடனடியாக அது விளங்கியது. மீண்டும் ஒரு முறை, எரிச்சல், குதர்க்கம் போன்ற எதிர்மறைக் காரணிகளிலிருந்து விலகி வரும் பொழுது, இம்மாதிரி வியப்பூட்டுகின்ற நிகழ்வுகளை அது ஈர்க்கும் என்பது விளங்கியது.

அந்த ஒரு எதிர்பாராத, சந்தோஷமான தருணத்தில் வாழ்வு என்னைப் பார்த்து கண் சிமிட்டியது போல் தோன்றியது. மேலும் அந்த ரொட்டி வகையை வாங்கியதன் மூலம், நான் ஒரு மாயாஜாலத்தைப் போன்ற வாழ்வின் மறுமொழியை உணர்ந்தேன்.



**Instructor's Acceptance of Different Procedures Attracts Financial Reward**

When you accept in full a request that you were irritably adverse to doing, life immediately responds positively along the exact same or similar lines.

A man performed a training class for a new vendor. He expected payment in 30-45 days. Several days later, the vendor asked the instructor to follow certain procedures for future classes, though in his mind it clashed with his normal way of doing things.

However, after a few hours, he changed his viewpoint and committed to these new procedures, and then went ahead and made an initial token effort to get the ball rolling in that direction.

Several hours later, he received a letter in the mail from the vendor. Inside was a check for the full amount, paid in one day!

When you shift from reluctance and habit, life cooperates with your change, and brings a startling "life response" result.

**மாற்று முறைகளை கடைப்பிடிக்கும்படி கூறியதை, பயிற்றுவிப்பாளர் ஏற்றுக்கொண்டது பணவரவை ஈர்த்தது**

எந்தச் செயலைச் செய்வதற்கு உங்களுக்கு சிறிதும் விருப்பம் இல்லையோ, அதைச் செய்யும்படி உங்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளை முழுமனதுடன் ஏற்றுச் செய்யும் பொழுது, வாழ்வு உடனடியாக அந்த செயலில் அல்லது அதற்கு இணையான ஒன்றில் தனது நேர்மறை மறுமொழியை வழங்குகின்றது.
ஒரு பயிற்றுவிப்பாளர் புதிய ஒரு வணிகருக்காக பயிற்சி வகுப்பு நடத்தினார். அதற்கான பயிற்சிக் கட்டணம் அவருக்கு 30-45 நாட்களில் கிடைக்குமென்று எதிர்பார்த்தார். சில நாட்களுக்குப் பின்னர், இனிவரும் பயிற்சி வகுப்புகளுக்கு சில குறிப்பிட்ட முறைகளைப் பின்பற்றுமாறு அவ்வணிகர், அந்த பயிற்றுவிப்பாளரைக் கேட்டுகொண்டார். அது அவர் வழக்கமாகப் பின்பற்றும் முறைகளுக்கு எதிராக அமைந்திருந்தது.

இருப்பினும், சில மணி நேரங்களுக்குப் பிறகு, அவர் தனது கோணத்தை மாற்றிக்கொண்டு, அம்முறையைப் பின்பற்றுவதற்கு உறுதி எடுத்தார். பின்னர், அம்முறைகளைப் பின்பற்றுவதற்கான சில ஆரம்ப கட்ட வேலைகளை ஒரு "டோக்கன் ஆக்டாக" செய்து முடித்தார்.சில மணி நேரங்களுக்குப் பிறகு, அவ் வணிகரிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அதில் அவரது முழு பயிற்சிக் கட்டணத்திற்கான காசோலை இருந்தது.
உங்கள் பழக்கத்திலிருந்தும், தயக்கத்திலிருந்தும், நீங்கள் மாறும் பொழுது, வாழ்வு உங்களுக்கு உறுதுணையாக செயல்பட்டு, அதிசயிக்கத்தக்க "வாழ்வின் மறுமொழி" விளைவைக் கொண்டு வருகிறது



**Preventing Repetition of Tech Issue Attracts Fantastic Facility Improvements**

Intensely trying to improve procedures so their previous negative expression will not repeat attracts startling positive organizational and procedural developments in the next round.

An instructor had a very difficult time of it with a client company several months back. It was due in large part to a missing computer component.

Several months later, he had another scheduled class to conduct at the same company headquarters. Concerned that the same problem might reoccur, he undertook a full court press with officials involved that it would not happen again.

When he arrived at the office, he was startled by how much the overall facility had improved, as well as how they had made dramatic improvements in the technology he was so concerned about. He was in fact dazzled by the enormity of the Improvements.
Moreover, it turned out that the session he conducted went exceedingly well, far surpassing his expectations.

By intensely focusing on preventing the repetition of a previous serious problem, he attracted a starling set of positive results all around.
—-
PS. It should also be noted that the issue was consecrated - i.e. offered to the higher power, the Mother -- at various points by the instructor, providing additional life response-evoking positive energy.

**தொழில்நுட்ப தவறு மீண்டும் வருவதைத் தடுத்தது, நிறுவனத்தின் வியத்தகு மேம்பாட்டிற்கு வித்திட்டது**

முந்தைய எதிர்மறை வெளிப்பாடுகள் வராமலிருப்பதற்காக, தீவிரமாக செயல்முறைகளை மேம்படுத்த முயன்றது வியத்தகு வகையில் நேர்மறையாக 'ஆர்கனைசேஷன்' முன்னேற்றத்தையும், அடுத்த திட்டத்தில் செயல்முறை முன்னேற்றத்தையும் ஈர்த்தது.

பல மாதங்களுக்கு முன்னர் தனது வாடிக்கை நிறுவனம் ஒன்றில் கணினி சம்பந்தப்பட்ட ஒரு உதிரிபாகம் இல்லாததால் பயிற்றுவிப்பாளர் ஒருவர் மிகுந்த சிரமத்திற்கு ஆளானார். பல மாதங்களுக்குப் பின்னர், அதே நிறுவனத்தின் தலைமையகத்தில் அவருக்கு மற்றொரு பயிற்சி வகுப்பு ஏற்பாடாகியிருந்தது. அதே பிரச்சினை மீண்டும் வரலாமென்ற காரணத்தினால், அவர் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் சந்தித்து,

அப்பிரச்சினை மீண்டும் வராமலிருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தார்.

பின்னர் அவர் அந்த அலுவலகத்திற்கு வந்த பொழுது , அலுவலகத்தில் அனைத்து வசதிகளையும் மேம்படுத்தி இருப்பதையும் மேலும் அவர் பெரிதும் கவலைப் பட்ட தொழில்நுட்பத்தில் அவர்கள் மிகச்சிறந்த மாற்றங்கள் செய்து இருப்பதையும் கண்டு பிரமித்துப் போனார்.

உண்மையில் , அத்தகைய தரமான, மேம்பாட்டைக் கண்டு அவரடைந்த ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. மேலும் அவர் நடத்திய பயிற்சி வகுப்பு, அவர் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மிக சிறப்பாக நடந்தேறியது.

முந்தைய முக்கியமான பிரச்சினை மீண்டும் வராமலிருப்பதற்காக அவர் தீவிரமாக முயன்றது, வியத்தகு வகையில் அனைத்து இடங்களிலும் நேர்மறை விளைவுகளை ஈர்த்தது.

பின்குறிப்பு:

மேலும் இப்பிரச்சினை பல்வேறு இடங்களில், அந்த பயிற்றுவிப்பாளரால் அன்னையின் உயர்சக்திக்கு உவந்தளித்து, சமர்ப்பணம் செய்யப்பட்டிருந்ததால், நேர்மறை சக்தியை ஈர்க்கும் கூடுதலான வாழ்வின் மறுமொழி விளைவைக் கொண்டு வந்திருப்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.



**Easing of a Challenging Work**

Overcoming one's reluctance to engage in a work, and then making the extra effort at the outset to prepare for it, attracts an easing of all the work in ensuing stages.
A man was up against an apparent challenging work. For one, he was not too eager to review certain materials the client had asked him to review, as it seemed complicated and confused compared to other engagements.
However, the man then changed his outlook, and made the extra effort to understand his client's needs, including the fore mentioned materials. When he then made that effort, he soon discovered that the work was far easier than he thought; reducing his psychological stress about the matter!
That is the life response power of reversing out of one's reluctance. It opens up conditions of smooth flow and ease.

**சவாலான வேலையை எளிமைப்படுத்த முனைவது**
வேலையில் ஈடுபட மறுக்கும் தயக்கத்தில் இருந்து விடுபடுவது, பின்னர் அந்த வேலையை துவக்கத்திலிருந்தே அதிக முயற்சியுடன் உருவாக்குவது போன்ற மன நிலைகள், அந்த வேலையின் அடுத்தடுத்த நிலைகளை எளிதானதாக்கும் நிகழ்வுகளை ஈர்க்கும்.

ஒரு நபருக்கு சவாலான பணி ஒன்றை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவரது வாடிக்கையாளர் ஒருவர் தமது பொருள்களை ஆய்வு செய்து தரும்படி கேட்டிருந்தார். மற்ற வேலைகளை ஒப்பிடுகையில், பார்ப்பதற்கு சிக்கலாகவும், குழப்பம் நிறைந்ததாகவும் இருந்ததால் இந்த வேலையைச் செய்ய அவருக்கு மனமில்லை.

இருப்பினும் அவர் தனது மனப் போக்கை மாற்றிக்கொண்டு, தனது வாடிக்கையாளரின் தேவையை மேற்சொன்ன வேலைகள் உட்பட, புரிந்துகொள்ள பெரும் முயற்சி எடுத்தார். அத்தகைய முயற்சியை எடுத்த உடன் அவர் நினைத்ததை காட்டிலும் அந்த வேலை மிகவும் எளிதாக இருந்தது. அவ் வேலையால் ஏற்பட்ட மன இறுக்கமும் குறைந்தது.

இது ஒருவர் தயக்கத்தை உதறி விட்டு உவந்து செய்யும் மனநிலைக்கு மாறியதற்கு வாழ்வு அளித்த மறுமொழி. எளிதான, ஒத்திசைவான நிலைகளுக்கு அது வழிகாட்டுகிறது.



**Maintaining Consecration of a Serious Issue**

Consecration of a serious issue moves toward perfection (and thus a positive life response outcome) when it is accompanied by an absolute still mind that is not worried about the future result.

Moreover, each time the worry rises, it can be replaced by another consecrated effort which will build up ensuing Faith. Accompanied by a still mind, the divine Force can then move and accomplishes its intention.

Even thinking about whether or not the Force will accomplish should be replaced by silencing the thought, and then again consecrating it out of existence. The result will reflect our efforts to make the consecration perfect.

Here's a recent true life example:
A man had an important meeting coming up which could lead to the need for a serious action to be taken. At first he consecrated the entire issue, let go of it, and had Faith in the outcome. Then each time the issue came to mind over the course of the next several days, he immediately halted the thought and then consecrated again.
When the man arrived at the meeting several weeks later, the bothered thought and emotion came up again as he waited for the other party to arrive, and once more he consecrated the outcome, kept the thought out of mind, and again maintained his Faith.
Finally, the other individual informed the man that there was no need to take any serious action, as had been suggested the previous month, much to the individual's relief!

The consecrated effort had achieved the desired outcome. The divine Force had fully worked on his behalf.

**ஒரு முக்கிய விஷயத்தில் சமர்ப்பணத்தை தொடர்ந்து செய்தல்**

ஒரு முக்கிய விஷயத்தில் எதிர்கால விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் முற்றிலும் அமைதியான மனத்துடன் செய்யப்படும் சமர்ப்பணம் , அவ்விஷயத்தை முழுமையை நோக்கி நகர்த்தும். (அதனால் வாழ்வின் நேர்மறை மறுமொழியும் கிடைக்கும்.)

மேலும் ஒவ்வொரு முறையும் , மேலெழுந்து வரும் கவலையில் ஆழ்வதற்குப் பதிலாக , நம்பிக்கையை ஆழப்படுத்தும் மற்றொரு சமர்ப்பண முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மனம் சலனமற்று இருந்தால், அதன் துணை கொண்டு இறைசக்தி செயல்பட்டு தான் எண்ணியதை சாதிக்கும்.

இறை சக்தியால் இவ்விஷயம் முழுமையாக நிறைவேறுமா..? என்று எழும் எண்ணம் கூட அமைதிப்படுத்தப் பட வேண்டும். அந்த எண்ணம் அழியும் வரை சமர்ப்பணம் செய்ய வேண்டும்.

முடிவான பலன்,

சமர்ப்பணத்தைச் செம்மைப்படுத்த நாம் மேற்கொண்ட முயற்சிகளின் அளவைத் தெரிவிக்கும்.

இது சமீபத்தில் நடந்த ஒரு உண்மைச் சம்பவம்.

ஒரு நபருக்கு முக்கியமான கூட்டம் (meeting) ஒன்றில் கலந்து கொள்ள வேண்டி இருந்தது. அதில் கடும் நடவடிக்கை ஒன்று எடுக்கப்படலாம். முதலில் அவர் முழு விஷயத்தையும் சமர்ப்பணம் செய்தார். பிறகு விஷயத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, அனைத்தும் நல்லபடியாக நடக்கும் என நம்பிக்கை கொண்டார். அடுத்த பல நாட்களுக்கு, அந்த விஷயம் நினைவுக்கு வரும் பொழுதெல்லாம், எண்ணத்தை உடனடியாக நிறுத்தி அதை சமர்ப்பணம் செய்தார்.

பல வாரங்களுக்கு பிறகு அவர் அந்த கூட்டத்தில், மற்றவர்கள் வருகைக்காக காத்துக்கொண்டு இருந்த பொழுது , அவ் விஷயத்தைப் பற்றிய கவலையான எண்ணங்களும் உணர்வுகளும் மீண்டும் மேலோங்கவே, மேலும் ஒருமுறை விளைவை சமர்ப்பணம் செய்தார். எண்ணங்களை விரட்டி, மனதை அமைதியாக்கி, அசையாத நம்பிக்கையுடன் இருந்தார்.

இறுதியில் அந்த மற்றொரு நபர், முந்தைய மாதத்தில் பரிந்துரைக்கப்பட்டது போல் கடும் நடவடிக்கை ஏதும் எடுக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்தது அவருக்கு மன நிம்மதியை அளித்தது.

அவரது சமர்ப்பண முயற்சி விரும்பிய விளைவினை அளித்தது. இறைசக்தி அவரது நோக்கத்தை முழுவதும் நிறைவேற்றியிருந்தது.



**Airport Incident: Higher Power Orchestrating the Details of Life**

Once again I have perceived how Mother keeps saving me from my own foolish errors. Even when I haven't made a consecrated effort on my part. Here's a recent example:

On many high-end automobiles, all you need to do to start the car is to push a small button. Still you are given a key with electronic buttons on it to open and close the doors of the vehicle.

Because I had been using the inside little button so often to start and shut down the car, that when it came time to return the car to the rental company, I neglected to return the keys!

And so discouraged somewhat and mildly shocked, I headed toward the airport via a shuttle bus with unreturned keys in my pocket.

I then thought about how to handle this disturbing situation. First off, I was hoping I could drop off the keys at the rental company's office at the airline terminal; but I soon discovered that there was no such thing. Then when I asked an attendant what to do, I was instructed to use the "white courtesy phone" to speak to someone about what to do. However, the phone was dead!

So I turned around, exited the terminal, hoping to return the keys to the driver of the shuttle to the offsite car rental company.

I prepared for the usual lengthy wait for the bus. However, this time the shuttle bus came almost immediately; in less than two minutes! And when I stepped on board the bus and began to explain my predicament to the driver, I noticed that the bus was practically empty, so he was able to give me his undivided attention. After explaining my situation, the driver cheerfully said he would take the keys back to take car rental company. And so when I turned back to the terminal, I noticed that the bus INSTANTLY took off, when they normally wait awhile for passengers to enter the vehicle.

It all transpired so swiftly and effortlessly; as if I were on a magic carpet ride.

I immediately sensed the Higher Power at work. Mother's Force operating in full to help rectify this troubling situation.

I have indeed felt this swift moving vibration at work many times in the past; with everything dovetailing and synchronizing, as if a Divine Watchman was orchestrating the details of Life.

It was indeed yet another unforgettable instance of the Higher Power at work!

**விமான நிலைய சம்பவம்:**

**வாழ்வின் ஒவ்வொரு அசைவையும் திட்டமிட்டு நடத்தும் இறைசக்தி**

நான் அறிவில்லாமல் செயல்பட்டு தவறுகள் புரியும் பொழுதும், எனது தரப்பில் முறையான சமர்ப்பண முயற்சியை மேற்கொள்ளாது இருந்து போது கூட , ஸ்ரீ அன்னை என்னை காப்பாற்றிக் கொண்டே இருக்கிறார் என்பதை மீண்டும் ஒருமுறை புரிந்து கொண்டேன். இதோ சமீபத்தில் நடந்த ஒரு சம்பவம்.

பெரும்பாலான உயர்தர மோட்டார் வாகனங்களை இயக்குவதற்கு நாம் செய்யவேண்டியதெல்லாம் ஒரு பொத்தானை அழுத்த

வேண்டியது தான். இருப்பினும் வாகனத்தை திறந்து மூடுவதற்கு மின்னணு பொத்தான்கள் கொண்ட சாவியும் கொடுக்கப்பட்டிருக்கும்.

நான் அடிக்கடி உள்ளிருந்த பொத்தானையே, காரை திறந்து மூடுவதற்கு பயன்படுத்திக் கொண்டு இருந்ததால் அந்த வாடகை காரைத் திருப்பிக் கொடுக்கும் பொழுது சாவியை கொடுக்க மறந்து விட்டேன்.

அதை தாமதமாக உணர்ந்த நான் பலத்த ஏமாற்றத்துடனும் சிறிது அதிர்ச்சியுடனும் அந்த சாவியை கையில் வைத்துக் கொண்டே, அங்கிருந்து பேருந்தில் (Shuttle Bus) ஏறி விமான நிலையம் செல்ல முற்பட்டேன்.

பிறகு அந்த சிரமமான சூழ்நிலையை எப்படி கையாள்வது என யோசித்தேன். முதலில் அந்த வாடகைக் கார் நிறுவனத்தின் அலுவலகம் ஏதும் விமான முனையத்தில் இருந்தால், அங்கு சாவியை ஒப்படைத்து விடலாம் என நம்பிக்கை கொண்டிருந்தேன்; ஆனால் சிறிது நேரத்திலேயே அப்படி ஒன்றும் இல்லை என்பது தெரிந்து விட்டது. பிறகு, அங்குள்ள ஓர் ஊழியரை அழைத்து என்ன செய்யலாம் எனக் கேட்ட பொழுது, அங்கிருந்த வெள்ளை தொலைபேசியை எடுத்து, யாரோ ஒருவரைத் தொடர்பு கொண்டு என்ன செய்வது எனக் கேட்கலாமென அறிவுரை வழங்கினார். எனினும், அந்த தொலைபேசி வேலை செய்யவில்லை.

எனவே நான் திரும்ப நடந்து, வெளியே சென்று, விமான நிலையத்தில் இருந்து கிளம்பும் பேருந்தின் ஓட்டுனரிடமே

சென்று, அந்த கார் நிறுவனத்திடம் சாவியைக் கொடுத்துவிடச் சொல்லலாமா என நினைத்தேன்.

அந்த பேருந்துக்காக வெகு நேரம் காத்திருக்க வேண்டுமென எண்ணி, அதற்கு மனத்தளவில் தயாரானேன். எனினும், இம்முறை உடனடியாக அந்த பேருந்து வந்து விட்டது, அதுவும் இரண்டு நிமிடத்திற்குள்ளாகவே! பேருந்தில் ஏறியவுடன், அந்த ஓட்டுனரிடம் என்னுடைய இக்கட்டான சூழ்நிலையை விளக்க ஆரம்பித்தேன், மேலும் அந்த பேருந்து பிரயாணிகள் யாருமின்றி காலியாக

இருந்தது, எனவே அந்த ஓட்டுனரால் வேறு எந்தவித கவனச் சிதறலுமின்றி என்னுடைய பிரச்சினையை கேட்க முடிந்தது. என் நிலைமையை விளக்கிய பின்னர், அந்த ஓட்டுனர் கார் சாவியை எடுத்துக் கொண்டு போய், தானே கார் வாடகை நிறுவனத்திடம் கொடுத்து விடுவதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். நான் மீண்டும் விமான முனையத்திற்கு திரும்ப முற்படும் பொழுது, பொதுவாக பிரயாணிகள் ஏறுவதற்காக சிறிது நேரம் காத்திருக்கும் அந்த பேருந்து, அன்று உடனடியாகக் கிளம்பியதைக் கவனித்தேன்.

அனைத்தும் உடனடியாகவும், எந்த சிரமமுமின்றியும் முடிந்து விட்டன;

அதனால் நான் ஒரு மாயக் கம்பளத்தில் பறப்பதைப் போல உணர்ந்தேன்.

அந்நேரத்தில் உடனடியாக உயர் சக்தி செயல்பட்டது எனக்கு விளங்கியது. இந்த குழப்பமான சூழ்நிலையில் ஸ்ரீ அன்னையின் சக்தி முழுவதுமாக செயல்பட்டதனால், இப்பிரச்சினையை சரி செய்ய முடிந்தது.

இவ்வளவு விரைவாக உயர்சக்தி செயல்படுதலை நான் கடந்த காலத்தில் பலமுறை உணர்ந்துள்ளேன்; அது நம்மைக் கண்காணித்துக் கொண்டிருக்கும் தெய்வீக சக்தி, அனைத்து நிகழ்வுகளையும், ஒருங்கிணைவாக, சரியான நேரத்தில், சரியான முறைப்படி நடத்தும் லீலையைப் போன்றது.

இது உண்மையிலேயே, மறக்கமுடியாத, உயர் சக்தியின் மற்றொரு லீலையாகும்.



**"UNENDING LIFE ON EARTH" INCIDENT**

An interesting thing happened to me today as it relates to the subject of "eternal life."
As I was driving home after shopping for groceries with a friend, I started thinking about our capacity to live as long as we wish.

I thought of the possibility at several levels:
Biologically, I thought some people genetically live longer than others, which could spread.

Medically, I understood that Medical technology could devise all sorts of ways to keep us alive for a very long time, if not forever.

Evolutionarily, I thought that the human species will gradually evolve through nature towards unending life. But that could take forever.

Spiritually, I ruminated, we can open to the supramental force, which can change our cellular functioning, replacing organs with corresponding centers of consciousness, enabling unending life if we so choose.

After thinking about this, I refocused on the task at hand; making my way back to my house.

And so when I arrived home a few minutes later and unloaded the groceries into my house, an Asian man dressed in shorts suddenly appeared in my driveway, and enthusiastically called out to me "Jesus can give you eternal life!"

He then walked up close to me, and handed me a pen attached to a tiny little booklet explaining his position and the sect he belonged to. He then walked away with a big smile on his face, and wished me well.
A little startled, I managed to do the same.
I quickly understood how my earlier focus on the various capacities to achieve unending life attracted this gentleman from out of nowhere!

Except where he advocated eternal life beyond this world, essentially in Heaven, I had been focusing my thoughts on its possibility here on earth!

**புவியில் நித்தியத்துவ வாழ்வு - ஒரு சம்பவம்**

"என்றும் சாஸ்வதமான வாழ்க்கை" என்னும் கருத்தைப் பற்றி, எனக்கு இன்று சுவராசியமானதோர் அனுபவம் ஏற்பட்டது.

மளிகைச் சாமான்களை வாங்கிவிட்டு, நண்பருடன் காரில் வீட்டுக்கு வந்து கொண்டிருந்த பொழுது, இவ்வுலகில் நாம் விரும்பியபடி எவ்வளவு காலம் வாழ முடியம் என்கிற கருத்தைப்பற்றி சிந்திக்கலானேன்.

அதற்கான சாத்தியங்கள் பல்வேறு நிலைகளில் இருப்பதாக யோசித்தேன்:
உயிரியல் கூற்றுப்படி, மரபணு சம்பந்தமான காரணங்களினால், சிலர் மற்றவர்களைக் காட்டிலும் அதிக நாள் வாழலாம், அந்நியதி மேன்மேலும் தொடரலாம் என்பது எனது எண்ணம்.

மருத்துவ கூற்றுப்படி, அதன் பல்வகை தொழில்நுட்பம், மரணமில்லா வாழ்வுக்கு வழிகாணாவிட்டாலும், நம்மை நீண்ட நாட்கள் வாழச் செய்வதற்கு உதவி புரியலாம் எனப் புரிந்து கொண்டேன்.

பரிணாம கூற்றுப்படி நான் யோசித்தது என்னவென்றால், மனித குலம் தன்னிலையிலிருந்து படிப்படியாக பரிணாம வளர்ச்சியடைந்து, நித்தியத்துவ வாழ்வை நோக்கிச் செல்லலாம், எனினும் அச்சாத்தியத்திற்கு நெடுநாள் பிடிக்கலாம்.

ஆன்மீகரீதியாக, நாம் சத்தியஜீவிய சக்தியை ஏற்றுக் கொண்டால், அது உயிரணுக்களின் செயல்பாட்டை மாற்றி, மனித உறுப்புகளுக்கு பதிலாக, அதற்கு நிகரான ஜீவிய மையங்களை அமைத்து, நாம் விரும்பினால் நித்தியத்துவ வாழ்வை வழங்க முடியும் என யோசித்தேன்.

இந்த யோசனைக்குப் பிறகு, நான் கையிலிருந்த மற்ற வேலையில் கவனம் செலுத்தியவாறே வீட்டிற்குச் செல்ல ஆரம்பித்தேன்.

நான் வீட்டிற்கு வந்து மளிகைப் பொருள்களை இறக்கி வைத்த சில நிமிடங்கள் கழித்து, திடீரென அரைக்கால் சட்டை அணிந்த ஓர் ஆசிய மனிதர் என் வாசலுக்கு வந்து, "இயேசுநாதரால் உங்களுக்கு நித்தியத்துவ வாழ்வைக் கொடுக்க முடியும்" என்று உற்சாகத்துடன் குரல் கொடுத்தார்.
பின்னர் அவர் என்னருகே வந்து, ஒரு சிற்றேடுடன் இணைக்கப்பட்டிருந்த பேனாவையும் என்னிடம் கொடுத்து விட்டு, தன்னுடைய குறிக்கோளையும், தான் எந்த சமய உட்பிரிவைச் சார்ந்தவர் என்பதையும் எடுத்துரைத்தார். அதன் பின்னர் என்னை வாழ்த்திவிட்டு, ஒரு பெரிய புன்முறுவலோடு அங்கிருந்து கிளம்பிச் சென்றார். அதை சற்றும் எதிர்பாராது நான் சிறிது அதிர்ச்சியடைந்தாலும், பதிலுக்கு புன்னகை செய்தேன்.

இதற்கு முன்பு, எவ்வாறு பல்வகை வழிகளில் நித்தியத்துவ வாழ்வை அடைய முடியும் என்று கவனமுடன் யோசித்தது, எங்கிருந்தோ அந்த பண்பாளரை ஈர்த்திருந்தது என்பதை வெகுவிரைவில் புரிந்து கொண்டேன்.

அவர் அப்படி ஒரு சாஸ்வதமான வாழ்வை இவ்வுலகில்லாது, சொர்க்கத்தில் அடையலாம் எனப் பரிந்துரைத்திருந்ததைத் தவிர, நான் இப்புவியில் அதற்கான சாத்தியங்கள் உண்டு என யோசித்துக் கொண்டிருந்தேன்!




**"SLICE OF LIFE" INCIDENT**
Focus your mind intensely on addressing a conundrum, and life will create a solution for you.

Yesterday we were discussing why there are no drive-through pizza outlets where you could buy a single slice or a small portion like other fast-food chains. We then concluded it either might not be a viable business strategy, or it just never worked out in the past. Still I wondered....

It turns out that the next day I noticed the following (which I sent as a note to a friend).
“I just noticed that there is a combo Taco Bell and Pizza Hut that’s a drive-through in Seal Beach. So therefore you could drive-through and order a personal pizza for one, which is the solution to what we talked about yesterday! A drive through Pizza Place!
It was a Life Response to our focused interest in a possibility!”

**"SLICE OF LIFE" INCIDENT**

இதுவரை தீர்வு காணப்படாத ஒரு விஷயத்தில், உங்களது மனம் ஆழ்ந்து, விடை காண விரும்பும் வேளையில், வாழ்வு அதற்கான பதிலை உருவாக்கித் தருகிறது.
மற்ற துரித உணவகங்களில், உணவுப் பதார்த்தங்களை காரில் இருந்தபடியே வாங்குவதற்கான drive through வசதி உள்ளதைப் போல, ஒன்று அல்லது சில துண்டுகள் மட்டும் அதாவது நமது தேவைக்கு ஏற்றார் போல கொஞ்சம் Pizza வாங்கும் வசதி ஏன் இல்லை என நேற்று நாங்கள் கலந்து உரையாடிக் கொண்டு இருந்தோம். அது ஒரு சாத்தியமான வியாபார முறையாக இல்லாமல் இருக்கலாம் அல்லது ஏற்கனவே முயற்சி செய்து முடியாமல் போயிருக்கலாம் என முடிவுக்கு வந்தோம். ஆனால் என் மனம் யோசித்துக் கொண்டே இருந்தது...
அடுத்த நாளே எனக்கு சில விஷயங்கள் தெரிய வந்தது. (அதைப்பற்றி கீழ்க்கண்டவாறு எனது நண்பருக்கு ஒரு செய்தி அனுப்பினேன்.)

"இப்பொழுதுதான் Seal Beach-ல் Taco Bell மற்றும் Pizza Hut இணைந்து நடத்தும் ஒரு drive through உணவகத்தைக் கண்டேன். எனவே நாம் நேற்று பேசிக்கொண்டிருந்தைப் போல உங்களால் காரில் இருந்தபடியே Pizza வை கேட்டு வாங்கிக் கொள்ள முடியும். காரில் இருந்தபடி உணவு வாங்கும் வசதிகளை கொண்ட ஒரு Pizza உணவகம்.!

நாம் ஆர்வமுடன் ஆராய்ந்த ஒரு விஷயத்திற்கு, வாழ்வு தன் மறுமொழியாக அதை சாத்தியமாக்கித் தந்திருக்கிறது"



**Indians' Supramental Synchronicity**
I have noticed an astonishing phenomenon that has occurred in my daily life over the years. Whenever I consider a life response I have recently experienced, suddenly from out of nowhere Indians appear on the scene! Where none were there before. And it is even more astonishing when considering that there are very fee Indians in my community.

Indians are surely very open to and in the flow of some form of Supramental synchronicity!

**இந்தியர்களின் சத்தியஜீவிய ஒருங்கிணைவு**
கடந்த பல வருடங்களாகவே, என் தினசரி வாழ்வில் ஒரு ஆச்சரியத்தக்க நிகழ்வைக் கண்டு வருகிறேன். எப்பொழுதெல்லாம் நான் வாழ்வின் மறுமொழி அனுபவத்தை காண்கிறேனோ, அப்பொழுதெல்லாம் திடீரென இந்தியர்கள் எங்கிருந்தோ வந்து அங்கே தென்படுவர். இதற்கு முன்பு அங்கு யாரும் இருந்திருக்க கூட மாட்டார்கள். மேலும் என்னுடைய சமூகத்தில் வெகு சில இந்தியர்களே உள்ளனர் என்பதைக் கருதும் பொழுது, அது மிகவும் ஆச்சரியத்தக்க விஷயம்.

நிச்சயமாக இந்தியர்கள், சத்திய ஜீவிய ஒருங்கிணைவை ஏற்கத் தயாராக இருக்கும் மனநிலையில் இருப்பதோடு, ஏதோ ஒரு ரூபத்தில் அதனோடு ஒத்திசைவோடும் இருக்கிறார்கள்.



**Volkswagen Bus Sync**
Though I have had hundreds, perhaps thousands of synchronicities before, I just had another one that I thought would be worth sharing.

Just a few minutes ago I got into my car and turned on the radio and instantly heard on a news program discussion about Volkswagen; in particular, how owners of these vehicles have an almost fanatic attachment to them.

At that moment I looked up and saw before me very busy traffic on the street stopped at a traffic light. And yet their standing out right before me was a beige Volkswagen 1960s VW bus; precisely the type of vehicle that was being discussed on the radio!
I have not seen such a vehicle in months, but there it was instantaneous to my focused interest of hearing discussion on it on the radio.

As I have mentioned before in other posts, such synchronicities are a very common experience for me.
And by the way, I managed to get a photo of said vehicle. ☺
—-
There is a slight addenda to the story. It turns out that not 10 minutes before I experienced the VW vehicle, I was sitting in a restaurant in which I was reading an article about how BMW had just tossed out it’s top executive because of it’s lack of focus on electric vehicles. BMW is of course a German car company and vehicle just like Volkswagen.

**Volkswagen பேருந்தும் ஒருங்கிணைவும்**
நான் நூறு அல்லது அநேகமாக ஆயிரம் ஒருங்கிணைவு நிகழ்வுகளைக் கண்டிருந்த போதிலும், இப்பொழுது நான் கண்ட மற்றொரு நிகழ்வினை பகிர்வது முக்கியமெனக் கருதுகிறேன்.

சில நிமிடங்களுக்கு முன்பு நான் காரில் ஏறியவுடன், வானொலியில் Volkswagen காரைப் பற்றிய கலந்துரையாடலைக் கேட்டேன். குறிப்பாக, அந்த கார்களின் உரிமையாளர்கள் அவற்றின் மீது எத்தகைய அதீத பற்று கொண்டுள்ளனர் என்பதைப் பற்றிய கலந்துரையாடல் அது. சரியாக அதே நேரத்தில், எனக்கு முன்னே சாலையில் அதிகப்படியான போக்குவரத்து நெரிசல்காரணமாக என்னுடைய கார் traffic light-ல் நிற்க நேர்ந்தது. அப்பொழுது எனக்கு முன்பு நின்று கொண்டிருந்தது, 1960-ஆம் வருடத்திய beige நிற Volkswagen பேருந்து; குறிப்பாக வானொலியில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அதே வகை வாகனம்! பல மாதங்களாக அத்தகைய வாகனத்தை நான் கண்டதில்லை, ஆனால் இப்பொழுது வானொலியில் அதைப்பற்றிய விவாதத்தை கவனமுடன் கேட்டதற்கு மறுமொழியாக, உடனடியாக என் கண் முன்னே அது தோன்றியிருக்கிறது. நான் முன்பே பல பதிவுகளில் குறிப்பிட்டுள்ளதைப் போல, இத்தகைய ஒருங்கிணைவு நிகழ்வுகள் வழக்கமாக நான் காண்பவை. அத்தோடு அந்த வாகனத்தையும் என்னால் புகைப்படம் எடுக்க முடிந்தது.:)
இக்கதையுடன் கூடுதலாகச் சேர்ந்த ஒரு தகவல். அது VW வாகன அனுபவத்தைக் காண்பதற்கு முந்தைய 10 நிமிடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு விஷயம். நான் ஓர் உணவு விடுதியில் அமர்ந்தவாறு செய்தித்தாளில் உள்ள ஒரு கட்டுரையைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் BMW நிறுவனம் மின் வாகன தயாரிப்பில் கவனமின்றி இருந்ததற்காக அதன் மேல் அதிகாரிகளை கடுமையாகச் சாடியதாக குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையில் Volkswagen-ஐப் போலவே BMW வும் ஒரு ஜெர்மானிய கார் தயாரிக்கும் நிறுவனமாகும்.






**Life Success Required for Wisdom to Spread Demonstrated in Dramatic Book Authors Incident**

**A knowledge itself, no matter how great does not ordinarily lead to outer success - be it financial, business, or similar. Rather a success happens first in the field of Life, that then incorporates the knowledge.**

Eg Garry Jacobs of MSS carried around 'Consciousness Approach to Business Management' booklet by Karmayogi in the late 70s/early 80s, presenting it to certain individuals so that it's profound wisdom could be applied in business and elsewhere. He had only modest success.

Then several years later Garry wrote a book based on Karmayogi's knowledge called 'The Vital Difference'. Though at first outraged that his co-author got equal billing on the cover when he had hardly written a word, Garry gave up his egotistical view and gave his co-author equal listing.

IMMEDIATELY Garry attracted business clients worldwide, and his Mira International consulting business took off. It changed the course of his professional life. AND only then could the knowledge of Karmayogi be truly applied in a practical way!
Thus Life's exigencies (including the vast Response) came first. THEN the Knowledge followed.

So what about the vast inner knowledge and wisdom others have developed in recent years? E.g. the Supramental KnowledgeBase, Character of Life insights, principles from The Book , et al. Well they too require a Life Success vehicle of some sort to first take shape in order for tis ultimate profound knowledge can be made use of and applied in the world.

**ஒரு விஷயத்தில் பொதிந்துள்ள ஞானத்தை வாழ்க்கையில் பெறப்படும் வெற்றியின் மூலமாகத் தான் புரிந்து கொள்ள முடிகிறது. --- எழுத்தாளர்களின் வாழ்வில் பிரமிப்பூட்டும் வகையில் நிகழ்ந்த விஷயம்**
நிதி நிர்வாகம், வர்த்தகம் அல்லது அதைப் போன்ற எந்தத் துறையாக இருந்தாலும் அவற்றைப் பற்றிய 'ஞானம்' மட்டுமே -- அது எத்தனை பெரியதாக இருந்தாலும் சரி -- வெற்றியைக் கொடுத்து விடாது. மாறாக, வாழ்வில் வெற்றி கிடைத்த பின்பு, அந்த முறையை அறிதல் ஞானமாகிறது.

உதாரணத்திற்கு MSS-ஐச் சேர்ந்த Garry Jacobs அவர்கள் 1970 ம் ஆண்டுகளின் இறுதியிலும், 1980 களின் ஆரம்ப வருடங்களிலும்,

ஸ்ரீகர்மயோகி எழுதிய 'Consciousness Approach to Business Management" என்னும் சிற்றேட்டின் ஆழமான ஞானத்தை வர்த்தகம் அல்லது மற்ற துறைகளில் பயன்படுத்த முடியுமென்பதால், அதை சில நபர்களுக்குக் கொடுப்பதற்காக பெருமுயற்சி எடுத்தார். எனினும் அதில் சிறிதளவே வெற்றி கிடைத்தது.

பின்னர் பல வருடங்கள் கழித்து, ஸ்ரீகர்மயோகி அவர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அவர் "The Vital Difference" என்னும் ஒரு புத்தகம் எழுதினார். அப்புத்தகத்தின் இணை எழுத்தாளர் அவர் பங்கிற்கு ஒரு வார்த்தை கூட எழுதவில்லை என்பதால் முதலில் Garry கடும் கோபமுற்று இருந்தார். பின்னர் அவர் தமது அகந்தை மனப்பான்மையை விட்டு விட்டு, அவருக்கு அப்புத்தகத்தில் சரிசமமாக இணை எழுத்தாளர் அந்தஸ்து வழங்கினார்.

அதற்கு மறுமொழியாக, உடனடியாக உலகமெங்கிலும் இருந்து Garry வர்த்தக வாடிக்கையாளர்களை ஈர்த்தார். அவருடைய Mira International Consulting Business- ம் துரிதமாக முன்னேறியது. அது அவரது தொழில் வளரும் வேகத்தை அதிகப்படுத்தியது. மேலும், அதன் பின்னர் மட்டுமே ஸ்ரீகர்மயோகி அவர்களின் கருத்துக்களை நடைமுறையில் உண்மையாகப் பயன்படுத்த முடிந்தது.
இவ்வாறு வாழ்வின் நெருக்கடி நிலையும் (அதைத் தொடர்ந்த மறுமொழியும்) முதலில் வந்தது. பின்னர் அதன் விளைவாக ஞானம் விளைந்தது.

அப்படியென்றால், சமீப காலங்களில் பலர் பரந்த அக அறிவையும், ஞானத்தையும் சேகரித்திருந்ததைப் பற்றி என்ன சொல்வது? உதாரணத்திற்கு, The Supramental KnowledgeBase, Character of Life பற்றிய உள்நோக்கு, The Book புத்தகத்தின் கருத்துக்கள் போன்று பல. அவையும் கூட முதலில் சரியாக உருவாவதற்கு, வாழ்வில் ஏதாவது ஒரு வழியிலா, அல்லது ஒரு வாயில் மூலமாகவோ வெற்றி தேவைப்படுகிறது. அதன் மூலமே இந்த அடிப்படையான ஆழ்ந்த ஞானத்தை பயனளிக்கும் வகையில் உலகத்திற்கு வழங்க முடியும்.



**Darcy's Consciousness Responsibility**
“Consciousness Responsibility” is to take responsibility for things you are not directly responsible for, attracting great fortune to your doorstep.

Example: When the elopement happened involving the youngest Bennet sister Lydia and the scoundrel Wickham in Pride and Prejudice, potential scandalizing everyone, Darcy took responsibility for the entire matter though he had no direct hand in the issue. As a result, he not only made the effort and resolved the entire issue, saving the entre Bennet family, but attracted the woman of his dreams to marriage, Eliza Bennet.
By going beyond normal responsibility - i.e. dealing with what you are normally responsible for - to Consciousness Responsibility, which is be responsible for a wider field that others are actually accountable for, - he changed the course of his and several other peoples' lives.

**டார்சியின்"ஜீவியத்துடனான தார்மீகப் பொறுப்பு"**
நிகழ்ந்த விளைவுகளுக்கு நாம் நேரடியாகக் காரணமாக இல்லாவிட்டாலும் கூட அதற்கு "ஜீவியத்துடன் தார்மீகப் பொறுப்பேற்று" செயல்படுவது அதிர்ஷ்டத்தை நம் அருகில் அழைத்து வரும்.

உதாரணமாக Pride & Prejudice நாவலில் பென்னட் குடும்பத்தாரின் இளைய மகள் லிடியாவும், போக்கிரியான விக்காமும், ஓடிப்போன சம்பவம் நிகழ்ந்தபோது அனைவரும் இழி நிலைக்கு ஆளாகினர். இச்சம்பவத்திற்கு நேரடியாக எந்த வகையிலும் தான் காரணமில்லை என்றாலும், டார்சி தார்மீகப் பொறுப்பை முழுமையாக ஏற்றுக் கொண்டான்.

அதன் விளைவாக முயன்று, அப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வு கண்டதோடு, பென்னட் குடும்பத்தாரையும் காப்பாற்றினான். அத்தோடு அவனது கனவு தேவதையான எலிசபெத் பென்னட்டுடனான திருமணமும் அவனுக்குக் கூடி வந்தது.

கடமையாகச் செய்ய வேண்டிய விஷயங்களைத் தாண்டி, அதாவது கட்டாயமாகப் பொறுப்பேற்று செய்யவேண்டிய விஷயங்களுக்கு அப்பாற்பட்டு, பரந்து, மற்றவர்களின் வாழ்வுக்கும் ஜீவியத்துடன் தார்மீகப் பொறுப்பேற்று செயல்பட்டதால், அவன் தனது வாழ்வையும் பிறரது வாழ்வையும் மாற்றி அமைத்தான்.




**Phileas Fogg: How Higher Consciousness Supports Actions of a Positive Person**

People of great character attributes may attract the support of the Higher Consciousness through the workings of life, even though they are not cognizant of the fact.
E.g. the character Phineas Fogg ,who manages to traverse the world in a balloon in the story 'Around the World in Eighty Days', demonstrated great calm and equality of being on his journey; a wonderful capacity to live in the moment; was creative in the extreme; was kind and had goodwill toward others, along the way; and had great organizational capacities.

In the end he wins his bet and accomplishes his extraordinary feat, with a seemingly miraculous-like support of Life at the end of the story.

Perhaps we can say that he expresses so much positive energy, that he naturally aligns with the support of the Higher Power and Consciousness, even if that relationship is subconscious to the recipient. Through Life the Higher Power offers its boons to a person endowed with great positive attributes for accomplishment and success.

**Phileas Fogg : நேர்மறை எண்ணங்கள் கொண்ட ஒரு மனிதனின் செயல்களுக்கு உயர்ந்த ஜீவியம் எங்ஙனம் துணைபுரிகிறது**

சிறந்த நற்பண்புகளைக் கொண்ட மனிதர்கள், உயர்ந்த ஜீவியத்தைப் பற்றி அறிந்திராவிட்டாலும், வாழ்வின் செயல்முறைகளில் அதன் உதவியை ஈர்க்க முடியும்.

உதாரணத்திற்கு, 'Around the world in 80 days' என்கிற கதையில் ஒரு பலூனில் உலகை வலம் வந்து சாதிக்கும் Phileas Fogg என்கிற கதாபாத்திரம், தனது பயணத்தின் போது ஆழ்ந்த அமைதியையும், சம நிலையையும் வெளிப்படுத்தினார். பயணத்தின் போது, நிகழ்காலத்தில் வாழும் அற்புதத் திறன்; புதியன படைப்பதில் உச்ச வரம்பு; மற்றவர்களிடம் அன்பும், நல்லெண்ணமும் கொண்டிருந்தார். மேலும் அவருக்கு அனைத்தையும் முறையாகவும், ஒழுங்காகவும் செய்ய இயலும் சீரிய திறமைகளும் இருந்தன.

கதையின் இறுதியில், வாழ்வின் அதிசயக்கத்தக்க துணை கொண்டு, அவர் தனது அதி தீர சாகசத்தைப் பூர்த்தி செய்ததோடு, பரிசுத் தொகையையும் வென்றார்.
அவர் மிக அதிக அளவில் நேர்மறை உணர்வுகளைக் கொண்டிருந்ததால், அவை ஆழ்மனத் தொடர்பாக இருந்தபோதிலும், அவரால் உயர் சக்தி மற்றும் உயர் ஜீவியத்தின் துணையுடன் இயல்பாக இணைய முடிந்தது என்று கூறலாம். சிறந்த நற்பண்புகளால் நிறைந்த மனிதனுக்கு, வாழ்வின் வாயிலாக உயர் சக்தி, சாதனைகளையும், வெற்றிகளையும் வரமாக நல்குகிறது.







**LIFE RESPONSE - தொடர்புகள்**

"விஷயங்களுக்குள் தொடர்புண்டு. நாம் அதைக் காண்பதில்லை. தொடர்பு தற்செயலானதாகவோ, தவிர்க்க முடியாத

தொடர்பாகவோ இருக்கும். அதைக் கண்டுகொண்டால், அத்தொடர்பு மூலம் அச்செயலை நிகழ்த்தலாம். அதுவே Life Response. நாம் Life Response-ஐ உண்டுபண்ணலாம்”

(eg) என் தம்பிக்கு பூரி இஷ்டம் என்றால், அவன் என் வீட்டுக்கு வரும்தோறும் தற்செயலாய் பூரி செய்திருப்பேன். பூரி செய்யும்பொழுதெல்லாம் அவன் வரமாட்டான். அவன் வரும்பொழுது பூரி டிபனிருக்கும் என்றால், நான் ஒருமுறை தம்பி வரவேண்டும் என்று விரும்பும்பொழுது, பூரி செய்தால் வருவான்.

- எலிசபெத் பெம்பர்லியில் மனம் மாறியவுடன், மறுநாள் வரவேண்டிய டார்சி, அன்றே வருகிறான்.

(from the book, "எங்கள் குடும்பம்" by Sri Karmayogi)





**GOODWILL AND LIFE RESPONSE**

கடந்த 500 ஆண்டுகளில் விஞ்ஞானத்தால் உலகம் பெற்ற நன்மைகளுக்குச் சமமானவற்றை உலகம் ஓராண்டில் பெற உதவும் ஞானம் Life Response.

இதை எல்லா கோணத்திலிருந்தும் புரிந்து கொள்ளலாம். Goodwill நல்லெண்ணத்தின் மூலமாக நடப்பவற்றை நான் முக்கியமாகக் கருதுகிறேன்.

ரெயில்வே ரெக்ரூட்மெண்ட் போர்டில் வேலை செய்யும் அன்பர் கம்ப்யூட்டரில் வேலை செய்பவர். Guru Soft என்ற Website-ல் Life Response பற்றிய அனுபவங்களை வெளியிடுவதால், இந்த அன்பர் கீழ்க்கண்ட அனுபவத்தை அந்த Siteக்கு அனுப்பியிருந்தார்.

“நான் இந்த போர்டில் வேலை செய்கிறேன். பரீட்சை சம்பந்தமான வேலைகள் என்னுடையது. பரீட்சைக்குத் தயார் செய்து பல கட்டங்களுண்டு. அது பிரம்மாண்டமான வேலை. சென்ற வாரம் நான் போர்ட் சேர்மனிடம் இதை எலக்ட்ரானிக் மூலம் செய்வது சுலபம், செலவு குறைவு என்றேன். சேர்மன் சம்மதப்படவில்லை, இது முடியும் என்பது என் தீர்மானம். 3 நாள் கழித்து சேர்மன் என்னை அழைத்து ஒரு அயல்நாட்டு Software கம்பனி பரீட்சையை கம்ப்யூட்டர் மூலம் நடத்துகிறது. அதை நான் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார். நான் விரும்பியவையும், மற்றவைகளையும் கம்பனி கொண்டுவந்துள்ளது.”

- **நல்லெண்ணம் செயல்படும்.**
- **நல்லெண்ணம் Life Response மூலம் செயல்படும்.**
- **அன்னை நல்லெண்ணம் மூலம் Life Response ஏற்படுத்துகிறார்.**

(Sri Karmayogi from மலர்ந்த ஜீவியம் article)